# செயற்திறன் அறிக்கை - 2023



மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

(செலவுத் தலைப்பு இலக்கம் – 171)

# பொருளடக்கம்


| உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| **அத்தியாயம் 01** | |
| நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு | 1 – 18 |
| **அத்தியாயம் 02** | |
| முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் | 19 - 50 |
| **அத்தியாயம் 03** | |
| வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன் | 51 - 61 |
| இணைப்பு I | |
| **அத்தியாயம் 04** | |
| செயற்திறன் குறிகாட்டிகள் | 61 - 62 |
| **அத்தியாயம் 05** | |
| பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை (SDG) அடைவதன் செயற்திறன் | 63 - 69 |
| **அத்தியாயம் 06** | |
| மனித வளத் தோற்றுவாய் | 70 - 85 |
| **அத்தியாயம் 07** | |
| இணக்க அறிக்கை | 86 - 93 |

# அத்தியாயம் 01

## நிறுவனத்தின் தோற்றுவாய்/ நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 தொலைநோக்கு

அபிவிருத்தியின் முழுமையான பலன்களினை நியாயமாகவும் மற்றும் சமமாகவும் அனுபவிக்கும் வளமான சமுதாயம்.

### 1.2 பணிக்கூற்று

தேசிய முன்னுரிமைகள், தேவைப்பாடுகள், அதேபோல சர்வதேச தரங்களினைக் கவனத்திற்கொண்டு பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல், மகளிர், சிறுவர்கள், பாதிக்கப்படக்கூடிய மற்றும் சலுகைகள் கிடைக்காத நபர்களின் சமூகப் பாதுகாப்புக்குத் தேவையான சட்டம்சார், நிறுவனம்சார் மற்றும் மனிதவள சேவைகளினை வழங்குதல், மேம்படுத்துவதற்கான திட்டங்களினைத் தொகுத்தல் மற்றும் செயலாக்குதல்.

## 1.3 அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2289/43 என்ற இலக்க மற்றும் 2022.07.22 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு நிறுவப்பட்டுள்ளது. இவ் அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் பிரிவு மற்றும் சமூக வலுவூட்டல் பிரிவு என்ற இரு பிரிவுகளின் கீழ் செயற்பட்டு வருகிறது.

அமைச்சின் பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

- அரசினூடாக செயலாக்கப்படும் தேசியக் கொள்கையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் விடயம், அமைச்சுக்கு இணைக்கப்பட்ட திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை வகுத்தல், அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சு விடயப் பரப்புக்கு உரித்தான பொதுமக்கள் சேவைகளினை வினைத்திறனாகவும் மற்றும் நட்புடனும் வழங்குதல்.
- விரயம் மற்றும் ஊழலினைத் துரத்துவதனூடாக அமைச்சின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் முறைமைக்கு அமைவாக புதிய முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பத்தினைப் புகுத்தி சகல திட்டங்கள் மற்றும் நடைமுறைகளினை சீரமைத்தல்.
- பெண்கள் பட்டயத்தினைச் செயலாக்குதல்.
- அரச செயற்பாடுகளில் தீர்மானமெடுத்தல், அரசியல் துறையினூடாக பெண்களின் பங்களிப்பு மற்றும் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கு மூலோபாயங்களினை தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல்.
- மோதல்கள் மற்றும் வறுமையினால் பீடிக்கப்பட்ட பெண்களினை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளினை எடுத்தல்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளினைத் தடுப்பதற்கான சட்டங்கள், கொள்கைகளினை வலுப்படுத்துதல் மற்றும் அமுலாக்குதல்.
- பாலினம் மற்றும் ஆண் பெண் பாகுபாடு அடிப்டையில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளினைத் தடுப்பதற்கு தற்போதுள்ள சட்டங்களினைத் திருத்தி புதிய சட்டங்கள், கொள்கைகளினை உருவாக்குதல் மற்றும் அமுலாக்குதல்.
- பெண்களினைத் தலைமையாகக் கொண்ட குடும்ப அலகுகளினை வலுவூட்டுவதற்கு கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்களினை வடிவமைத்தல் மற்றும் அமுலாக்குதல்.
- பெண்கள் மற்றும் சிறுவர் செயற்பாடுகளுக்கான பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை நிறைவேற்றுதல்.
- முன்பள்ளிகளுக்கான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரித்து அமுலாக்குதல்.
- உடல் ரீதியாகவும் மற்றும் உள ரீதியாகவும் ஆரோக்கியமான குழந்தைகளினை உருவாக்கும் நோக்குடன் முன்பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை வடிவமைத்தல்.
- பாதுகாப்பற்ற நிலையிலுள்ள குழந்தைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக சர்வதேச தரத்திற்கு ஏற்ப நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல்.
- சிறுவர் பட்டயத்தினை அமுலாக்குதல்.
- சிறுவர் பகல்நேர நிலையங்களினைக் கண்காணித்தல்.
- செவண சரண வளர்ப்பு பெற்றோர் பிரேரணைத் திட்டத்தினை அமுலாக்குதல்..
- அதிஉன்னதமான திறமைகளினைக் கொண்ட பிள்ளைகளின் அத்திறன்களினை மேம்படுத்துவதற்கு நிதிசார் உதவிகளினை வழங்குதல்.
- சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் தேவைகளினை அடையாம் காணுதல் மற்றும் அத்தேவைகளினைப் பூர்த்தி செய்தல்.

- பொதுசன உதவி பிரேரணைகள் திட்டத்தினை மீளாய்வு செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் சிறந்த புதிய சீர்திருத்தங்களினை அறிமுகப்படுத்துதல்.
- காச நோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள், தொழுநோயாளர்கள், புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளர்களுக்கும் மற்றும் அவர்களில் சார்ந்திருப்பவர்களுக்கும் உதவிகளினை வழங்குதல்.
- குடும்ப உளவளத்துணை சேவைகளினை வழங்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற மரபுகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதற்கும் உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் பொதுப் போக்குவரத்தில் இணைந்து செயற்படுவதற்கு இயலுமானவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களினைச் செய்தல், தேவையான வசதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை அமுலாக்குதல்.
- முதியோர்களினைப் பராமரித்தல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் முதியோர்களின் பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகளினை விளைத்திறன் மற்றும் வினைத்திறனான வகையில் நிறைவேற்றுவதற்கு பின்வரும் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் செயலூக்கமான வகையில் செயற்பட்டு வருகின்றன.

i. நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்
ii. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)
iii. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)
iv. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
v. தேசிய பெண்கள் பணியகம்
vi. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)
vii. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)
viii. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)
ix. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)
x. முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகம்
xi. முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி செயற்திட்டம்
xii. இலங்கை பெண்கள் பணியகம்
xiii. சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)
xiv. கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)
xv. உளவளத்துணைப் பிரிவு

மேலும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு தேவையான நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு தொடர்பில் உதவுவதற்கு நிர்வாகப் பிரிவு, கணக்குகள் பிரிவு, அபிவிருத்தி பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு அமுலாக்கப்படுகின்றன.
அதன் பிரகாரம், அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் செலவுத் தலைப்பு இலக்கம் 171 இன் கீழ் அமுலாக்கப்படுவதுடன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் செலவுத் தலைப்பு 331 இன் கீழும், சமூக சேவைகள் திணைக்களம் செலவுத் தலைப்பு 216 இன் கீழும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் செலவுத் தலைப்பு 217 இன் கீழும் அமுலாக்கப்படுவதுடன், இச் செயற்திறன் அறிக்கையினூடாக செலவுத் தலைப்பு இலக்கம் 171 க்கான முன்னேற்றம் பின்வருமாறாகும்.

# 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## 1.4.1 நிறுவனக் கட்டமைப்பு (மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு)



## 1.4.2 நிறுவனக் கட்டமைப்பு (மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு)




ப.நா. (ச.அ.தி)- பணிப்பாளர் நாயகம் (சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்)
ப.நா. (தே.ச.அ.நி.) - பணிப்பாளர் நாயகம் (தேசிய சமூக அபிவருத்தி நிறுவனம்)
மே.ப.நா. (ச.அ.தி)- மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்)
மே.ப.நா. (தே.ச.அ.நி.) -மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (தேசிய சமூக அபிவருத்தி நிறுவனம்)
சி.உ.செ. - சிரேஸ்ட உதவிச் செயலாளர்
உ.செ. - உதவிச் செயலாளர்
பி.ப. - பிரதிப் பணிப்பாளர்
உ.ப. - உதவிப் பணிப்பாளர்
பணிப். (கி.அ.ப.ஆ.நி.) - பணிப்பாளர்(கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்)
பி.பொ.மு. - பிரதிப் பொது முகாமையாளர்
அபி.உத் - அபிவிருத்தி உத்தியோகத்தர்

பணிப். (அபி) - பணிப்பாளர் (அபிவிருத்தி
பணிப் (திட்) - பணிப்பாளர் )திட்டமிடல்)
பணிப். (சௌ.மே.ப.) - பணிப்பாளர் ( சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்)
பி.கணக்காளர் -பிரதான கணக்காளர்
பி.உ.க. - பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
பணிப். (அ.ந. தே.செ.) - பணிப்பாளர் (அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்)
பணிப். (உள) - பணிப்பாளர் (உளவளத்துணை)
பணிப். (மு.தே.செ) - பணிப்பாளர் (முதியோர்களுக்கான தேசிய செயலகம்)
மு.உ. - முகாமைத்துவ உதவியாளர்
அலு.பணி. - (அலுவலகப் பணியாளர்)

## 1.5 அமைச்சின் கீழ் அமுலாக்கப்படும் திணைக்களங்கள்/ நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்

## மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

### நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்

#### அறிமுகம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம், குழந்தைகளின் உரிமைகளினைப் பாதுகாத்து, அநாதைகள், கைவிடப்பட்டோர், ஆதரவற்றோர் மற்றும் மோதலில் இடம்பெயர்ந்தோர் உட்பட அனைத்துக் குழுக்களினைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் சமவாய்ப்புக்களினை உருவாக்கிக் கொடுப்பதற்கு தேசிய, சர்வதேசக் கொள்கைகள் மற்றும் சட்ட விதிகளின் பிரகாரம் செயற்படும் தேசிய அளவிலான நிறுவனமாகும்.

#### பிரதான கடமைப் பொறுப்பு

தேசிய விதிமுறைகள் மற்றும் சர்வதேச தரங்களுக்கு இணங்க, அனாதைகள், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் சட்ட சிக்கல்களை எதிர்கொள்ளும் குழந்தைகளையும், பிரத்தியேகமான வகையில் அனைத்து குழந்தைகளின் உரிமைகளினைப் பாதுகாத்து அவர்களுக்கு சம வாய்ப்புக்களினை வழங்குதல் போன்ற பணியின் கீழ் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் அமுலாக்கப்படுகிறது.
நன்னடத்தை விடயத்தின் கீழ் பிரதானமாக மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் செயற்பாடுள் தொடர்பில் ஒருங்கிணைத்தல் மற்றும் உதவுதல், நன்னடத்தை விடயத்தின் கீழ் அமுலாக்கப்படும் பல்வேறு நிறுவனங்களுக்கு தேவையான தருணங்களில் வழிகாட்டுதல், தேசியக் கொள்கைகள்/தர நிலைகளினை உருவாக்குதல், மாற்றுப் பராமரிப்புக் கொள்கையினைச் செயற்படுத்துதல், குழந்தைகள் தொடர்பிலான சட்டங்களினைத் திருத்துதல் மற்றும் புதிய சட்டத்தினை வடிவமைப்பதற்கு உதவுவதல் இடம்பெறுகிறது.

சிறுவர் பாதுகாப்பு விடயத்தின் கீழ் சிறுவர் சாசனத்தினை அமுலாக்குதல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான சமூகக் கட்டமைப்புக்களினை நிறுவுதல், வலுவூட்டுதல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நாடுபூராவும் செயலாக்கப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் மேம்பாட்டு உதவி உத்தியோகத்தர்களினூடாக இடம்பெற்று வருகிறது.

### அபிவிருத்திப் பிரிவு

#### அறிமுகம்

2015 - 2030 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் கீழ், முன்னணி இலக்காகவிருப்பது, ஒவ்வொரு பெண்ணும் மற்றும் குழந்தையும் பாலின பாகுபாடு இல்லாமல் சமத்துவத்துடன் வாழ்வதற்கு சமூக, பொருளாதார மற்றும் சட்டரீதியில் நிலவும் தடைகளினை நீக்கி அவர்களினை அது தொடர்பில் வலுவூட்டுவதாகும்.

### கடமைப் பொறுப்பு

மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கும் அதற்கு ஆதரவளிப்பதற்கும், இலங்கைக்குக் கட்டுப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு மரபுகள் மற்றும் சட்டங்களை அமுல்படுத்தும் அரசாங்கப் பொறிமுறையின் பிரதான பங்குதாரரான மகளிர் மற்றும் சிறுவர் விவகார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, இணை நிறுவனங்களினால் அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல், ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல், தேசிய மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல், பின் தொடர்தல், பெண்களின் மற்றும் சிறுவர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மேம்படுத்துதல், சமத்துவத்தினை உறுதிப்படுத்துதல் மற்றும் முழு வளர்ச்சிக்கும் உதவும் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் தேசியளவிலான செயற்திட்டங்களினைத் தயாரித்தல்.

## திட்டமிடல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு

### அறிமுகம்

பெண்கள் மற்றும் சிறுவர் துறையில் அமைச்சின் சேவைகளினை மிகவும் விளைத்திறனாகவும் மற்றும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு, திட்டமிடுதல், செயற்படுத்துதல், பின்தொடர்தல் இடம்பெறுதல் மற்றும் அமைச்சின் தகவல்கள், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனையினை முறையாக முன்னெடுத்துச் செல்லுதல், அரச கொள்கை, அதனுடன் தொடர்பிலான சகல தொழில்நுட்பக் கொள்கைகளுக்கிணங்க அமைச்சின் தகவல்கள் தொழில்நுட்பச் செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்லுதல் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

## முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகம்

### அறிமுகம்

முன்பிள்ளைப்பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கான தேசியக் கொள்கைகளினை வடிவமைத்தல், அரச, அரச சார்பற்ற மற்றும் பிரத்தியேகப் பிரிவு ஒன்றிணைந்து முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல், அமுலாக்குதல், மதிப்பீடு செய்தல் மற்றும் தொடர்தல் இடம்பெற்றுவரும் தேசியப் பொறிமுறையாகும்.

### பிரதான கடமைப் பொறுப்பு

- முன்பிள்ளைப் பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான தேசியக் கொள்கைகளினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்கும் மைய நிறுவனமாக செயற்படுதல்.
- அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பிரத்தியேகப் பிரிவின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் வலையமைத்தல்.
- முன்பிள்ளைப் பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஆய்வுகளினை முன்னெடுத்தல், தரவுகளினைச் சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை வகுத்தல்.
- முன்பிள்ளைப் பருவத்திலுள்ள குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குதல்.
- முன்பிள்ளைப் பருவ விருத்திக்கான மனித வள மேம்பாடு.

## முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திச் செயற்திட்டம்

### அறிமுகம்

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி சேவைகளுக்கான சமமான அணுகலினை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் அதன் தரத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உலக வங்கி நிதியுதவியின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திச் செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன். 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை அச் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2023 ஆம் அண்டில் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் முடிவடையும் தறுவாயில் நாடுபூராவுமுள்ள 18,519 வரையிலான முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் சுமார் 657,526 வரையிலான சிறார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அக் குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுச் சேவைகளுக்கான சமமான அணுகல் மற்றும் அவற்றின் தரத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இச்செயற்த்திட்டத்தினூடாக இலங்கையின் தேசியக் கொள்கையின் 05 மூலோபாயக பகுதிகளில் காட்டப்பட்டுள்ள சில முக்கிய தலையீடுகளுக்கு ஆதரவினை வழங்கியுள்ளதுடன்,

1. முன்பிள்ளைப் பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி சேவைகளினை வழங்குவதை விரிவுபடுத்துதல் மற்றும் வலுவூட்டுதல்.
2. செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தல்

போன்ற பிரதான இரண்டு கூறுகளினைச் சுற்றி கட்டமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

முன்பிள்ளைப் பருவ ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகளினை வழங்குவதல், அதேபோல குறைந்த மற்றும் வசதி குறைந்த முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் சேவைகள் தொடர்பிலும் அவற்றின் தராதரத்தினை அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கமைவாக மேம்படுத்துவதற்குத் தேவையான கற்றல் - கற்பித்தல் உபகரணங்களினை வழங்குவதற்கு இச் செயற்திட்டம் உதவியுள்ளது.

### பிரதான கடமைப் பொறுப்பு

- குறைந்த வசதிகளினைக் கொண்ட இடங்களில்/பின்தங்கிய பகுதிகளில் புதிய முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களினை அமைத்தல் மற்றும் முன்பள்ளிகளினை நவீனமயமாக்குதல்.
- அடையாளம் காணப்பட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் கருவிகளினை வழங்குதல்.
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு வாசிப்புப் பொருள் கருவிகளினை வழங்குதல்.
- அடையாளம் காணப்பட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு நீர் வடிகட்டிகள் (Water Filters), விளையாட்டு உபகரணங்கள், மர தளபாடங்களினை வழங்குதல்.
- அடையாளம் காணப்பட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளினை வழங்குதல்.
- முன்பிள்ளைப் பருவப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- வெகுஜன ஊடகங்கள் மூலம் பெற்றோருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- முன்பள்ளிக் குழந்தைகளுக்கு காலையுணவினை வழங்குதல் (2023 ஜனவரி மாதம் தொடக்கம் யூன் மாதம் வரை)

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

### அறிமுகம்

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது, சகலவிதமான சிறுவர் வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் புகலிடமளிப்பதற்கும் தேசிய மட்டத்தில் செயற்படும் நிறுவனமாகும் என்பதுடன், குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் மற்றும் சட்டங்கள் குறித்தும் இது அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

### பிரதான கடமைப் பொறுப்பு

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 வது பிரிவின் பிரகாரம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பரந்த கடமைப் பொறுப்பொன்று வழங்கப்பட்டுள்ளது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தேசியக் கொள்கையினைத் திறம்பட செயலாக்குவதற்குத் தேவையான சட்ட, நிர்வாக அல்லது பிற சீர்திருத்தங்களினை உருவாக்குதல், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் குறித்த தேசிய தரவுத் தளத்தை உருவாக்கி பராமரித்தல், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான புகார்களை பொதுமக்களிடம் இருந்து பெற்று அவற்றை உரிய அதிகாரிகளுக்கு அனுப்புதல், சிறுவர் துஷ்பிரயோக வழக்கு செயல்முறையை மேற்பார்வை செய்தல், சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளுக்கான உதவி, மேற்பார்வை மற்றும் பின் தொடர்தலினை முன்னெடுத்தல், குழந்தை பாதுகாப்பு சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கான குறைந்தபட்ச தரநிலைகளை உருவாக்குதல் மற்றும் கண்காணிப்பது இதில் அடங்கும். மேலும் குழந்தையின் நலனுக்காக குழந்தை துஷ்பிரயோகத்தை தடுக்கும் மற்றும் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு பதிலளிக்கும் நோக்குடன் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினை உருவாக்கி நடாத்துதல். அனைத்து வகையான துஷ்பிரயோகங்களிலிருந்தும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான குழந்தை துஷ்பிரயோகம் தடுப்பு நுட்பங்கள், குழந்தைப் பாதுகாப்பு அறிவினை பரப்புவதற்கு குழந்தைகள், இளைஞர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் பொதுமக்களினை விழிப்புணர்வூட்டுதல், கல்வி வழங்குதல், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பில் பங்குதாரர்களின் கூட்டங்கள், பட்டறைகள், கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் போன்றவற்றினை நடாத்துவதும் பிரதான செயற்பாடுகளாகும்.

## இலங்கை மகளிர் பணியகம்

### அறிமுகம்

பெண்களினை பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டுவதற்கு செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை செயற்படுத்துவதற்கான தேசிய பொறிமுறையாகும். பலமான அமைப்புக்களின் வலையமைப்பினை உருவாக்குவதன் மூலம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் தேவைகளை கூட்டுச் செயற்பாட்டினூடாக பூர்த்தி செய்வதற்கும் இலங்கை மகளிர் பணியகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### பிரதான செயற்பாடு

இலங்கைப் பெண்களினை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டுவதற்காக பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை அடையாளம் காணுதல், திட்டமிடுதல், அமுலாக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல் மேலும் அனைத்து வயதுப் பெண்களின் தனித்துவத்தினை அடையாளம் கண்டு அவர்களினை தகுந்தவாறு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் பங்குதாரர்களாக்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவது பிரதான கடமைப் பொறுப்புக்களில் ஒன்றாகும்.

பெண்கள் என்ற காரணத்தினால் அவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளினைப் போக்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களிளை அமுலாக்குதல், சமூகத்தில் விசேட காரணங்களினால் பல்வேறு இன்னல்களினை எதிர்கொள்ளும் பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அத்துடன்

ஒட்டுமொத்த பெண் தலைமுறையினரின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை உயர் மட்டத்திற்கு உயர்த்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல். இடம்பெற்று வருகிறது. மேலும் பெண்கள் ஒரே அமைப்பில் செயல்படுவதற்கு (Smooth Functioning) பெண்களை சமூகத்தின் அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை ஒரே வலையமைப்பில் அமைப்பதும் முக்கியப் பணியாகும்.

## தேசிய மகளிர் குழு

### அறிமுகம்

1993 மார்ச் 08 ஆந் திகதி அமைக்கப்பட்ட தேசிய மகளிர் குழுவினூடாக பெண்கள் சாசனத்தின் பரிந்துரைகள் அமுலாக்கப்படுகின்றன. பெண்களின் நலன், பாதுகாப்பு மற்றும் புகலிடத்திற்கான கொள்கைகள் மற்றும் சட்டங்களினை உருவாக்கி வரும் தேசிய அமைப்பாகும்.

### பிரதான செயற்பாடு

சமத்துவத்தினை உறுதிப்படுத்தி, வன்முறையற்ற, பெண்கள் நட்புடன்கூடிய இலங்கை சமுதாயமொன்றினை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட தேசிய மகளிர் குழுவின் பிரதான செயற்பாடாகவிருப்பது, இலங்கைப் பெண்களினை உரிமைகளினைப் பாதுகாத்து மேம்படுத்துதல், சமத்துவத்தினை உறுதிப்படுத்துதல், முழுமையான வளர்ச்சிக்கு உதவும் கொள்கைகள் மற்றும் சட்ட திட்டங்களினை தயாரிப்பதாகும். இது தொடர்பில் தேசிய மகளிர் குழுவினூடாக பரிந்துரைகள், உதவியினை வழங்குதல் மற்றும் கண்காணித்து மதிப்பீடு செய்தல் இடம்பெறுகிறது. அதன் பிரகாரம் தேசிய மகளிர் குழுவில் புகார் நிலையமொன்றும் மற்றும் 24 மணிநேரமும் தேவையான சேவைகளினை வழங்கும் கட்டணமற்ற 1938 பெண்களுக்கு உதவுவதற்கென தொலைபேசிச் சேவையும் செயலிலுள்ளது. இச் சேவைகளினூடாக சட்ட ஆலோசனைகளினை வழங்குதல், ஆலோசனையினை வழங்குதல், உரிய நிறுவனங்களுக்கு முறைப்பாட்டாளர்களினை அனுப்புதல் மற்றும் அறிக்கைகளினைக் கோருதல் இடம்பெற்று வருகிறது. மேலும் கிடைக்கப் பெறும் புகார்கள் தொடர்பில் உரிய நேரத்தில் பின்தொடர்வதும் தேசிய மகளிர் குழுவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

## நிர்வாகப் பிரிவு

அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் மனித வளங்கள் மற்றும் பௌதிக வளங்களை நிர்வகிப்பதற்கான நிறுவன ஒழுங்குமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க சூழ்நிலைகளுக்கேற்றவாறு செயற்படுவதற்காக நிர்வாகப் பிரிவு செயல்படுகிறது.

## கணக்குகள் பிரிவு

செயற்பாட்டு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வருடாந்த ஒதுக்கீடுகளினை வழங்குதல், முகாமை செய்தல் மற்றும் கொடுப்பனவுகளினை முன்னெடுப்பதுடன், அரச கணக்குகளினை வெளிப்படைத்தன்மையுடனும், நிதிப் பிரமாணத்தினூடாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை ஒழுக்கத்துடன் முன்னெடுப்பது ஒப்படைக்கப்பட்டுள்ள பிரிவு கணக்குகள் பிரிவாகும், அமைச்சுக்கான கணக்குச் செயற்பாடுகள் மற்றும் ஒட்டுமொத்த கொள்முதல் நடைமுறை இடம்பெறுவதற்கு மேலாக திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளின் கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டுவருகிறது.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அமைச்சினால் முன்னெடுக்கப்படும் சேவைகள், நிகழ்ச்சித் திட்டங்களின் தரம் மற்றும் விளைத்திறனாக முன்னெடுப்பதற்குத் தேவையான நிதி ஆய்வு, செயற்திறன் ஆய்வு, முகாமைத்துவ அய்வு, திட்டக் கட்டுப்பாட்டு ஆய்வு மற்றும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய துறைகளினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வினை முன்னெடுப்பதனூடாக நிறுவனத்தின் எதிர்பார்த்த இலக்குகளினை எட்டுவதற்கு வழிகாட்டுதல் வழங்குதல் இடம்பெற்றுவருகிறது.

# சமூக வலுவூட்டல் பிரிவு

## சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

### அறிமுகம்

இலங்கையின் வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக நியாயத்தினை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளினை மேம்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு ஏழை மனிதனிடமும் மறைந்திருக்கும் திறன்களினை அடக்கும் தடைகளினை நீக்கி அக்குடும்பங்களினை வலுவூட்டுதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க திவிநெகும் (திருத்தம்) சட்டத்தினூடாக திருத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ளது.

### பிரதான கடமைப் பொறுப்பு

- தனிநபர், குடும்பம், குழு மற்றும் சமூகம் சார்ந்த பொருளாதார மேம்பாடு, வாழ்வாதார மேம்பாடு, நிறுவன மேம்பாடு மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- "அஸ்வசும" நலன் பயன் முன்மொழிவுகள் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள குடும்பங்களினை, பொருளாதாரம், சமூகம் மற்றும் உள ரீதியில் வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு நுண்நிதிக் கடன் வசதிகளினை வழங்குதல் மற்றும் அக்குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.

## சமூக சேவைகள் திணைக்களம்

### அறிமுகம்

ஶ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளதுடன், ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட பிரிவினருக்கு சிறந்த சூழலினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இத்திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது

### பிரதான கடமைப் பொறுப்பு

- அங்கவீனமுற்ற சமுதாயத்தினை புனர்வாழ்வளித்தல், முழுநேரமும் வதிவிடத்தில் வைத்துப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப்பொருள் மீட்பு தொடர்பில் தலையீடு செய்தல்.
- விழிப்புலனற்றவர்களுக்கான நம்பிக்கை நிதியத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- தற்போதைய சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ச்சிகள்/ஆய்வுகளினை நடாத்துதல், தலையீடு செய்தல் மற்றும் கொள்கைகளினை வகுத்தல்.

## அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)

### அறிமுகம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் செயலகம், 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான நட்புடனான சாதகமான சூழலொன்றினை உருவாக்குவதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரியினை உள்ளிட்ட நிவாரணங்களினை வழங்கும் நோக்குடன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினூடாக எடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மானங்களினை அமுலாக்குதல் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக இடம்பெறுகிறது.

### பிரதான கடமைப் பொறுப்பு

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதற்காக அவர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் உரிமைகளினைப் பாதுகாத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு தங்குமிட வசதிகளினை வழங்கி அவர்களுக்குப் பாதுகாப்பு வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் நபர்கள் தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளினை செயலாக்குதல், ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் உதவிகள் வழங்குதல்.
- பௌதிகச் சூழலினை உகந்தவாறு அமைத்தல் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளினைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டல்களினை வழங்குதல்.
- அங்கவீனம் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களினைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், புனர்வாழ்வளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

## முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)

### அறிமுகம்

இலங்கை வாழ் முதியோர் சமுதாயத்தின் உரிமைகளினைப் பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் தனித்துவமான வாய்ப்பொன்றாக 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டு 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினூடாக முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் அமைக்கப்படுதல் இடம்பெற்றுள்ளது.

### பிரதான கடமைப் பொறுப்பு

- முதியோர்களுக்கு அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குதல் குடும்பத்தினூடாக நிறைவேற்ற வேண்டிய செயற்பாடு என்பதை சமுதாயத்திற்கு உணர்த்துதல்.
- முதியோர்களினைப் பாதுகாப்பதற்காக பிரத்தியேகப் பிரிவின் முதலீட்டு வாய்ப்புக்களினை அதிகரித்தல்.
- முதியோர்களின் இயலுமைகள், திறன் விருத்தியினூடாக வருமானங்களினைப் பெருக்கும் வழிகளுக்கு முன்வைத்தல்.
- விழிப்புணர்வினை வளர்ப்பதனூடாக ஓய்வுகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளினைச் சமாளிப்பதற்கு தயார்படுத்துதல்.
- உதவி தேவைப்படும் முதியோர்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.

## இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

### அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சமூகப் பாதுகாப்புச் சபை சட்டத்தினூடாகவும் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தினூடாகவும் நிறுவப்பட்டு அமுலாக்கப்பட்டுவரும் அரச நியதிச்சட்ட நிறுவனமொன்றாகும். அரச ஓய்வூதியமொன்றுக்கு உரித்தினைக் கொண்டிராத சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைகள் திட்டத்தினை அமுலாக்குதல் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

### பிரதான கடமைப் பொறுப்பு

- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும்போது, அக்காலத்தில் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மரணிக்கும்போது, அவர்களில் தங்கிவாழ்வோருக்கு நிவாரணத்தினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களினை உரிய தொழிற் பயிற்சிகளில் ஈடுபடும்படி வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சுய தொழில்களில் ஈடுபடுமாறு இளைஞர்களினை வலுவூட்டுதல், அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் பயன்கள் தொடர்பில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களினை விழிப்புணர்வூட்டுதல்.
- சுய தொழில் செய்பவர்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

### அறிமுகம்

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் உயர் கல்வி நிறுவனமொன்றாக நிறுவப்பட்டுள்ள இந்நிறுவனம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழ் பட்டத்தினை வழங்குவதற்கு அதிகாரத்தினைக் கொண்ட நிறுவனமாக 2005 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், சமூகப் பணி (Social Work) தொடர்பிலான கல்வியினை வழங்கும் இலங்கையிலுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாகும்.

நிறுவனத்தின் மையப் பிரிவான நிர்வாக சபையின் (Governing Council) ஊடாக நிறுவனத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதிசார் செயற்பாடுகள் அமுலாக்கப்படுகின்றன. நிர்வாக சபையின் கீழ் அமுலாக்கப்படும் கல்விசார் விவகார சபையினூடாக (Academic Affairs Board) நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல் வழங்குதல் இடம்பெறுகினறது.

நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஒன்றோடொன்று தொடர்புடைய 4 முக்கியமான பிரிவுகளினைக் கொண்டு அமுலாக்கப்படுகிறது. அவை,

1. சமூக சேவைகள் கல்லூரி
2. பயிற்சிப் பிரிவு
3. சமூக மேம்பாடு, கொள்கைகள், ஆய்வுகள் மற்றும் வெளியீட்டுப் பிரிவு
4. நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு

### பிரதான கடமைப் பொறுப்பு

- சமூகப் பணி, சமூக அபிவிருத்திக் கல்வியினை மேம்படுத்துவதற்கான திட்டங்களினைத் தயாரித்தல்,
- சமூகப் பணி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலான பட்டம் மற்றும் முதுகலைப் பாடநெறிகளினை நடாத்துதல்.
- சமூக நலன்புரித் திட்டங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் கல்விச் செயற்பாடுகளினை நடாத்துதல் மற்றும் அவற்றினை மேம்படுத்துதல்
- சமூகப் பணிகளில் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட சமூகப் பணி மற்றும் சமூக மேம்பாட்டுக் கல்வி நடைமுறையில் ஆக்கபூர்வமான நடைமுறையினைத் தொடங்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

## சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)

### அறிமுகம்

வீட்டுடன் தொடர்பிலான உற்பத்திகளினை ஊக்குவித்து கிராமப்புற மக்களின் வருமான மட்டத்தினை உயர்த்தி, தேசிய உற்பத்திக்கு உயர் பங்களிப்பினை வழங்குவதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் நாடு முழுவதும் சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

மேலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கினைக் கொண்டு அமுலாக்கப்படும் கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள கிராம சக்தி சங்கங்களினை வலுப்படுத்தி எதிர்வரும் காலங்களில் முன்னெடுத்துச் செல்லுவதற்கென இப்பணியகம் பங்காற்றி வருகிறது.

### பிரதான கடமைப் பொறுப்பு

ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள உற்பத்தி திறன், வளங்கள், சந்தை போன்றவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட துறைகளில் திறன் கொண்டவர்களினை தொடர்புபடுத்தி, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களினை நேரடியாக உற்பத்திச் செயல்முறைக்கு பங்களிப்புச் செய்வித்து, அவர்களின் வருமான நிலையினை அதிகரிப்பதற்குத் தேவையான எந்திரங்கள், கட்டுமானம், தொழில்நுட்ப உதவி, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை வழங்குதல் மற்றும் நுண் நிதியக் கடன் வசதிகளினை வழங்குவதில் உதவுதல்.

## கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

### அறிமுகம்

கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம், 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது, 1978 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயமொன்றாக, அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கட்டப்பட்ட அல்லது பின்தள்ளப்பட்ட வறிய சமுதாயத்தின் சாத்தியமான ஆற்றலினை உயர்த்தி, அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கூட்டுத்தன்மையினை வளர்த்துக் கொள்ளுவதற்கு பங்களிப்பு மேம்பாட்டு எண்ணக்கருவின் அடிப்படையிலான வேறுபட்ட செயற்பாட்டுப் பயிற்சி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக புதிய அபிவிருத்தி மூலோபாயமொன்றினை அறிமுகப்படுத்திய தேசிய நிறுவனமொன்றாகும். உற்பத்தியின்போது, வறிய சமுதாயத்தின் சமூகப் பொருளாதார செயற்பாட்டினூடாக அவர்கள் முகங்கொடுக்கும் பாதகமான நிலைமையினை மிகவும் சாதகமான நிலைமையாக முழுமையாக மாற்றுவதற்கு தேவையான வலுவூட்டும் வினையூக்க செயல்முறை இந்நிறுவனத்தின் முக்கியமான கடமைப் பொறுப்பொன்றாகும்.

### பிரதான கடமைப் பொறுப்பு

- சமூக வளர்ச்சியில் அறிவு முகாமைத்துவம்
- சமூக வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனினை அதிகரித்தல்.
- புதுமையான வளர்ச்சி அணுகுமுறைகளினை அறிமுகப்படுத்துதல்.

## உளவணத்துணைப் பிரிவு

### அறிமுகம்

சமூகம் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உள ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு, உளவியல் ஆலோசனை மற்றும் சிகிச்சைசார் முறைகளினைப் பயன்படுத்தி உளத்தினை சிறந்தவாறு கட்டியெழுப்புதல் இப் பிரிவினூடாக இடம்பெறுகிறது.

### பிரதான கடமைப் பொறுப்பு

- மக்கள் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உளநலக் கோளாறுகள், உளநோய்கள் மற்றும் பல்வேறு உளவியல் சிக்கல்களினைக் கண்டறிந்து அந்த நிலைமைகளினைக் குறைப்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டும் குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
- சமுதாயத்தினை உள ரீதியில் வலுவூட்டுவதற்கு உளவியல் உளவளத்துணை தலையீட்டினைப் பயன்படுத்தி விழிப்புணர்வூட்டும் குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- உளநலக் குறைபாடுகள் மற்றும் உளவியல் சிக்கல்களுடன் வருகைதரும் வாடிக்கையாளர்களுக்கு தரமான உளவளத்துணை சேவைகளினை வழங்குவதன் மூலம் உளநலத்தினைக் கட்டியெழுப்புதல்.
- கையடக்கத் தொலைபேசி உளவளத்துணை சேவையினூடாக தனிநபருக்கு உளவளத்துணை சேவைகளினை வழங்குதல்.
- சமூக உணர்திறன் அதிகம் தேவைப்படும் சமூகக் குழுக்களினைக் கண்டறிந்து அவர்களின் உள நலனை மேம்படுத்தும் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

## நிர்வாகப் பிரிவு

அமைச்சு மற்றும் இணை நிறுவனங்களின் மனித வளங்கள் மற்றும் பௌதிக வள முகாமைத்துவம் தொடர்பிலான தாபன விதிக் கோவைகள், சுற்றுநிரூபங்களுக்கிணங்க மற்றும் தருணங்களுக்கமைவாகச் செயற்படுவதற்காக நிர்வாகப் பிரிவு அமுலாக்கப்படுகிறது. நிர்வாகப் பிரிவினூடாக பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு வினைத்திறனான சேவையொன்று வழங்கப்படுகிறது.

- அமைச்சு மற்றும் அமைச்சுக்கு உரித்தான சகல நிறுவனங்களின் பதவியணிக்கான நிறுவனம்சார் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளினை கண்காணித்தல்..
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளினை வழங்குவதனூடாக மனித வளத் திறனினை மேம்படுத்துதல்.
- அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சவை விஞ்ஞாபனங்கள், சட்டங்கள், வரைவுகள் போன்றவற்றினை சரியானவாறு முன்வைத்தலினூடாக கொள்கை வடிவமைப்புக்கு பங்களிப்புச் செய்தல்.
- தேவையான மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

## அபிவிருத்திப் பிரிவு

இவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் நோக்கங்களினை அடையும் பொருட்டு ஆலோசனைகளினை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் தொழிற்படுத்துதலினை முன்னெடுத்தல் இப்பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும். மேலும் பின்வரும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கண்காணிப்புச் செயற்பாடுகளும் இப்பிரிவினூடாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

- 2022/2023 ஆம் ஆண்டின் உயர் பருவத்தின் அரசின் நெல்லினைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி, அங்கவீனர், முதியோர் மற்றும் சிறுநீரகக் கொடுப்பனவுப் பயனாளிகள் மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ள பயனாளிகளுக்கு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், குடும்பமொன்றுக்கு 10 கிலோகிராம் அரிசி என்றவாறு வழங்கும் திட்டத்தினை ஒருங்கிணைத்தல்.
- அமுலாக்குவதற்கு எதிர்பார்த்த தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தினை அமைச்சினுள் அமைப்பதற்குத் தேவையான பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கணக்குகள் பிரிவு

செயற்பாடு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வருடாந்த ஒதுக்கீடுகளினை வழங்குதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினை முன்னெடுப்பதுடன், அரச கணக்குகளினை முன்னெடுப்பதை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்தல், நிதிப் பிரமாணங்களினூடாக பிரதான கணக்கீட்டு உத்தயோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை ஒழுக்கத்துடன் முன்னெடுத்துச் செல்லுதல் ஒப்படைக்கப்படிருக்கும் பிரிவு கணக்குகள் பிரிவாகும்.

அமைச்சுக்கான கணக்குகள் செயற்பாடுகள் மற்றும் மொத்தக் கொள்முதல் நடைமுறையினை முன்னெடுப்பதற்கு மேலாக, திணைக்களங்கள். நியதிசட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளின் கணக்குகளினை கண்காணித்தலும் இடம்பெறுகிறது.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமைச்சின் செயலாளருக்கு நேரடியாகப் பொறுப்பினைக் கூறும் பிரதான உள்ளகக் கணாக்காய்வாளர் ஒருவரின் கீழ் செயலாக்கப்படுவதுடன், அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சேவைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை தரமானதாகவும் மற்றும் வினைத்திறனாகவும் முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான நிதியினைக் கணக்காய்வு செய்தல், செயற்திறன் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு, சுற்றுச்சூழல் கணக்காய்வு, திட்ட நிர்வாகக் கணக்காய்வு மற்றும் கவனத்திற்குக் கொள்ளக்கூடிய துறைகளினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினை முன்னெடுப்பதனூடாக, எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு வழிகாட்டல்களினை வழங்குவதும் இடம்பெறுகிறது.

## திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

சமூக வலுவூட்டல் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயப்பரப்புக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களினைத் திட்டமிடுவதற்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயற்படுத்துதல், முன்னேற்றத்தினை முகாமை செய்தல் மற்றும் பிற நேர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்ளினை ஒருங்கிணைத்தல், இப் பிரிவின் கீழ் இடம்பெறுகிறது.

## 1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கப் பெறும் செயற்திட்டங்களின் தகவல்கள்

| | செயற்திட்டத்தின் பெயர் | பங்களிப்பு நிறுவனம் | செயற்திட்டத்தின் மதிப்பீடு (ரூ.மி.) | செயற்திட்ட காலவரையறை |
|---|---|---|---|---|
| 1 | உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவிச் செயற்திட்டம் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 695.394 | 2022 செப்ரெம்பர் தொடக்கம் 2024 ஆகஸ்டு வரை. |
| 2 | பாலின அடிப்படையிலான வன்முறைகளினைத் தடுத்தல் மற்றும் பெண்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டம் | ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் | 7.297 | 2023 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 திசம்பர் வரை |
| 3 | நிலையான சமூக அடிப்படையிலான குடும்ப வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் | செமாவுல் க்ளோபல் அறக்கட்டளை | உரிய முன்னணி நிறுவனத்தினால் நேரடியாகச் செலவு செய்யப்பட்டு அமுலாக்கப்படுகிறது. | 2023-2027 |
| 4 | சமூக பொருளாதார நெருக்கடியினால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அவசரகால நிவாரணம் வழங்கும் செயற்திட்டம் | ஐக்கிய நாடுகளின் பெண்கள் அலகு (UN WOMEN) | உரிய முன்னணி நிறுவனத்தினால் நேரடியாகச் செலவு செய்யப்பட்டு அமுலாக்கப்படுகிறது. | 2023 ஆகஸ்டு மாதம் தொடக்கம் 2024 பெப்ரவரி மாதம் வரை |
| 5 | பெண்கள் கூட்டுமுயற்சி, தலைமைத்துவம் மற்றும் வலையமைப்பினூடாக பொருளாதார ரீதியில் வலுவூட்டும் செயற்திட்டம். | JICA (ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்) | உரிய முன்னணி நிறுவனத்தினால் நேரடியாகச் செலவு செய்யப்பட்டு அமுலாக்கப்படுகிறது. | 2023-2025 |

# அத்தியாயம் 02

# முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

## 2.1 சட்டவிதிகளினை வலுப்படுத்துதல்

## மகளிர் மற்றும் பெண்கள் அலுவல்கள் பிரிவு

### பாலியல் சமத்துவத் சட்டத்தினை அறிமுகப்படுத்துதல்

சட்ட வரைவுத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட வரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் கௌரவ நீதியரசரின் அவதானிப்புக்களினையும் உள்ளடக்கி சட்ட வரைவுத் திணைக்களத்தினால் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### பெண்களினை வலுவூட்டும் சட்டத்தினை அறிமுகப்படுத்துதல்

பெண்கள் தொடர்பிலான தேசிய ஆணைக்குழுவொன்றினை அமைக்கும் சட்ட வரைவு மற்றும் பெண்களினை வலுவூட்டும் சட்ட வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தினூடாக வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், அவை கௌரவ நீதியரசருக்கு முன்வைத்து அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தேசிய பெண்கள் ஆணைக்குழுவினை அமைக்கும் சட்டமூலம் மற்றும் பெண்களினை வலுவூட்டும் சட்டமூலத்தினை ஒன்றிணைப்பது பொருத்தமானது என கௌரவ நீதியரசரினால் வழங்கப்பட்ட அவதானிப்புக்களினை கவனத்திற்கொண்டு தேசிய பெண்கள் ஆணைக்குழுவினை அமைக்கும் சட்டமூலம் மற்றும் பெண்களினை வலுவூட்டும் சட்டமூலத்தினை ஒன்றிணைத்து ஒரு சட்டமூலத்தினை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சட்டவரைஞர் திணைக்களத்தினால் மேற்குறிப்பிட்ட இரு சட்டங்களினையும் ஒன்றிணைத்து ஒரு சட்டமூலமாக தயாரிக்கப்பட்டு வருகிறது.

### சிறுவர்களின் உரிமைகள் தொடர்பிலான சட்டமூலம்

இலங்கையில் குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு, சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அனைத்து சட்டங்கள் மற்றும் கட்டளைகளை ஆய்வு செய்து அவற்றை தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப பொருந்துமாறு ஒரு சட்டம் என்றவாறு சிறுவர் உரிமைகளினை சட்டமாக்குதல் இதன் நோக்கமாகும். அது தொடர்பில் ஆய்வு செய்யப்பட்ட எண்ணக்கரு பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## சமூக வலுவூட்டல் பிரிவு

### அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவு

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்ட வரைவொன்றினைத் தயாரிப்பதற்காக 2023.03.13 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அந்த அங்கீகாரத்திற்கு இணங்க சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வரைவு நீதி அமைச்சினூடாக இவ் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலான அவதானிப்புக்களினை சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைப்பதற்காக நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### சைகை மொழிச் சட்ட வரைவு

சைகை மொழி சட்ட வரைவுகள், சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலான இணக்கப்பாடு சட்டவரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

**அங்கவீனமுற்ற நபர்களுக்கான அணுகல் கட்டளைகள் வர்த்தமானி**

அரச கட்டிடங்கள், பிரபலமான இடங்கள் மற்றும் சேவைகளினை வழங்கும் இடங்கள், அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு தயாரிப்பதற்காக 2006.10.17 ஆந் திகதிய 1467/15 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பிரவேசிப்பு கட்டளைகள் வர்த்தமானி மற்றும் அதனைத் திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ள 1619/24 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், தற்போதுள்ள நிலைமைக்குப் பொருந்தக்கூடியவாறு மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட துறையுடன் தொடர்புடைய நிபுணர்களினைக் கொண்ட குழுவின் மூலம், சர்வதேச தரநிலைகள் மற்றும் விவரக் குறிப்புக்களினைக் கருத்திற் கொண்டு அணுகல் கட்டளைகள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், உரிய தரப்பினரிடமிருந்து அவதானிப்புக்களினை பெற்றுக் கொள்ளுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.2 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

## மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

### அபிவிருத்திப் பிரிவு

**முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்**

**1. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கொள்கை உத்தரவுச் சட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினைத் தயாரித்தல்.**

- **பாலின சமத்துவம் மற்றும் பெண்களினை வலுவூட்டுதல் தொடர்பிலான தேசியக் கொள்கை**
  2023 மார்ச் 08 ஆந் திகதி சர்வதேச மகளிர் தினத்தில் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. கொள்கைசார் அடிப்படையில் மூலோபாய செயற்திட்டமொன்றினை வரைவு செய்தல் இடம்பெற்று வருகிறது. அது தொடர்பில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல்களினைச் சேகரித்து இடைவெளி பகுப்பாய்வொன்றினை முன்னெடுத்தல்.
- ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் முன்மொழிவு - 1325 அமுலாக்குதல் தொடர்பில் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்ட ஐந்தாண்டு தேசிய செயற்திட்டம் (2023-2027) 2023 மார்ச் மாதம் 8 ஆந் திகதியன்று நினைவுகூரப்பட்ட சர்வதேச மகளிர் தினமன்று மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. இச்செயற்திட்டத்தினை அமுலாக்கம் செய்வதற்கு வழிநடாத்தல் குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் விழிப்புணர்வூட்டப்பட்டு மத்திய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர், செயற்பாடுகளினை நிறைவேற்றுதல் தொடர்பில் பாதீட்டினை வடிவமைப்பதற்கு முன்னணி நிறுவனங்களின் கூட்டமொன்றினை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பாலின சமத்துவச் சட்டம் மற்றும் பெண்களினை வலுவூட்டும் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். இந்த இரண்டு சட்டமூலங்களின் இறுதி வரைவுகளைத் தயாரித்து சட்டமா அதிபரின் அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- "குழந்தைகள் உரிமைகள் சாசனத்தின் பிரகாரம் குழந்தைகளுக்கு ஒரு சட்டத்தினை உருவாக்குதல்" சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், இது தொடர்பிலான இடைவெளி பகுப்பாய்வு மற்றும் எண்ணக்கருப் பத்திரம் வரைவு செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தினை தயாரிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவது தொடர்பில் முன்வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பெண் - ஆண் சமூகமயமாக்குதல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான இரண்டாவது ஐந்தாண்டு தேசிய செயல் திட்டத்தில் (2024-2028) அனைத்து துறைசார்ந்த திட்டங்களும் தொகுக்கப்பட்டு மொழிபெயர்ப்புக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- தற்காலிக பெண்கள் பராமரிப்பு இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பில் வரைவு வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவது தொடர்பில் முன்வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மனித கடத்தலை எதிர்த்து நிர்வகிப்பதற்கான தேசிய மூலோபாய திட்டத்தில் எமது அமைச்சுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

## 2. தகவல், அறிக்கைகள்/ முன்னேற்ற அறிக்கைகளினை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்

- நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை போன்ற நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல்.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகம், இலங்கை மகளிர் பணியகம், தேசிய பெண்கள் குழு போன்ற பிரிவுகளினைக் கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின்தொடரும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- குழந்தைகள், பெண்கள் மற்றும் பாலினம் தொடர்பிலான துறைசார் கண்காணிப்புக் குழு, குழந்தைகளுக்கான பாராளுமன்ற மாநாடு மற்றும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெண்கள் மாநாடு தொடர்பிலான தேவையான தகவல்களினை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- ஐக்கிய நாடுகளின் அமைப்பு உட்பட அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களினை ஒருங்கிணைத்தல்.
- மகளிர் மற்றும் சிறுவர் விடயம் தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அறிக்கைகளினை முன்வைத்தல்.
    - ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய கால மீளாய்வு (UPR) அமர்விற்கு இலங்கை வழங்கிய தேசிய அறிக்கையின் மீளாய்வுக்கான பரிந்துரைகளின் பட்டியலுக்கு எமது அமைச்சுக்கு உரித்தான விடயத்துடன் தொடர்பிலான முன்மொழிய்ப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைச்சின் இணக்கத்தினை வழங்குதல்.
    - பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாடு (CEDAW) தொடர்பாக, இலங்கையின் 9 வது இடைக்கால அறிக்கை (2022) தொடர்பில் முன்வைக்கப்பட்ட 21 சிக்கல்கள் தொடர்பிலான பதில்கள் தயாரிக்கப்பட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக சர்வதேச CEDAW குழுவிற்கு 2023 ஆம் ஆண்டில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
    - ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54வது அமர்வில் இலங்கை சமர்ப்பித்த அறிக்கைக்கு தேவையான தகவல்களை வழங்குதல்.

## 3. ஊடக விடயம் தொடர்பிலான செயற்பாடுகள்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக சர்வதேச அளவில் ஒதுக்கப்பட்ட நாட்களில் அது தொடர்பில் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டுதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இலத்திரனியல் மற்றும் அச்சிடப்பட்ட ஊடகங்கள் மூலம், செய்திகள், நேர்காணல்கள் போன்றவற்றின் மூலம், பெண்களினை வலுவூட்டுதல் மற்றும் அவர்களினைப் பாதுகாப்பதற்காக அமைச்சினால் விரிவுபடுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பிலும் விளம்பரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 4. செலவு விடயங்களின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுத்தல்.

- காலாண்டுக்கு 1 என்ற அடிப்படையில் 25 மாவட்டங்களில் சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டுக் குழுக் கூட்டங்களினை நடாத்துவதற்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 23 மாவட்டங்களின் முதல் காலாண்டு கூட்டம், 22 மாவட்டங்களின் இரண்டாம் காலாண்டு கூட்டம், 22 மாவட்டங்களின் மூன்றாம் காலாண்டு கூட்டம் மற்றும் 15 மாவட்டங்களின் நான்காம் காலாண்டு கூட்டத்தின் கூட்ட அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.
- காலி மாவட்டத்தில் பாடசாலைச் சிறார்களுக்கு குறைந்த வயதில் கர்ப்பம் தரிப்பதைத் தடுக்கும் 5 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 1 நிகழ்ச்சித் திட்டம் என்றவாறு நடாத்தப்பட்டுள்ளது.
- பாலின அடிப்படையிலான வன்முறைகளினைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின் ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ளது.
    - பரிந்துரை பொறிமுறைக்கு (Referral Mechanism) பாலின அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் சேவைகளுக்கு அனுப்புவதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களை அழைப்பதன் மூலம் கண்காணிப்பு மற்றும் பின் தொடர்தல் கூட்டங்கள் 3 (கேகாலை, கண்டி, கம்பகா மாவட்டங்களில்) மற்றும் 3 முக்கிய வேலையரங்குகள் (கொழும்பு, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில்) நடாத்தப்படுதல்.
    - மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு வருகைதரும் பாதிக்கப்படக்கூடிய பெண்கள் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கான அவசரச் செலவுகளை ஏற்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் ஏற்பாடுகளை வழங்குவதற்கு 332 பிரதேச செயலகங்கள் மற்றும் 24 மாவட்டச் செயலகங்களுக்கு ரூ.5000/- என்றவாறு வழங்குதல்.

- உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான அவசர உதவிச் செயற் திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒதுக்கீடுகளின் கீழ்)
    - ஏழை மற்றும் நலிவடைந்த சமூகத்திற்கு நேரடி நிதி உதவிகளை வழங்குதல் மற்றும் அதனை ஊக்குவித்தல், அவர்களுக்கு வாழ்வாதார அபிவிருத்திக்கான உதவியினை வழங்குதல் மற்றும் சமூக பாதுகாப்பு அமைப்புகளின் செயல்திறன் மற்றும் மீள்தன்மையை மேம்படுத்துதல் போன்ற 03 முக்கியமான மூலோபாயங்களினை செயல்படுத்தும் திட்டம்.
    - இதன் கீழ், நிறுவனமயமாக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல், குறைந்த வசதிகள் கொண்ட அனாதை இல்லங்களின் பௌதிக வசதிகளை மேம்படுத்துதல், தற்காலிக பெண்கள் பாதுகாப்பு நிலையங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல். அந் நிலையங்களில் பௌதிக வசதிகளினை மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான பாதுகாப்புத் திட்டங்கள். வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களினை மேம்படுத்துவதும் இடம்பெற்று வருகிறது.
    - நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகம், இலங்கை மகளிர் பணியகம் மற்றும் அபிவிருத்தி பிரிவினூடாக இச் செயற்பாடுகள் செயலாக்கப்பட்டு வருகின்றன.
    - அதன் கீழ், 08 பிரதேச செயலகங்களில் சட்ட உதவி மற்றும் பாலினம் மற்றும் குடும்ப வன்முறையைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு தொடர்பான எட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# திட்டமிடல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு

## முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

### திட்டமிடல்

அமைச்சின் வருடாந்தச் செயற்திட்டம், மாவட்டத் திட்டம், பிரதான செயற்திறன் திட்டம், பேண்தகு அபிவிருத்தி இலக்குத் திட்டம் உட்பட பெண்கள் மற்றும் சிறுவர் துறையுடன் தொடர்பிலான திட்டங்களினைத் தயாரித்தல் இடம்பெற்றுள்ளது. அதற்கு மேலாக, தேசிய மற்றும் சர்வதேசக் கொள்கைகள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் இவ் அமைச்சின் விடயப் பரப்பின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்கள்/திணைக்களங்கள்

மற்றும் பிற அமைச்சுக்களூடாக திட்டமிடப்படும் திட்டமிடல் மற்றும் கொள்கைகள் காலத்தின் தேவையினைக் கொண்ட அறிக்கைகளுக்கு தொழில்நுட்ப வளப் பங்களிப்பினை வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

**செயற்படுத்துதல்**

அமைச்சின் சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டு அறிக்கைகளினை அறிக்கைகயிடுதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல். அதன் கீழ் 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**பின் தொடர்தல்**

காலி. கண்டி மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் அமைச்சின் ஒதுக்கீடுகளின் கீழ் செயலாக்கப்பட்ட தொழில்முனைவோர்/வாழ்வாதார மேம்பாட்டு செயற்திட்டங்களினைக் கண்காணித்து அச் செயற்திட்டங்களின் வெற்றி மற்றும் நிலையான தன்மையினை உயர்த்துவதற்குத் தேவையான பரிந்துரைகளினை உள்ளடக்கிய அறிக்கைகள் உரிய அமுலாக்கும் நிறுவனங்களுக்கு வழங்குதல் இடம்பெற்றுள்ளது. மேலும் நுவரெலியா மாவட்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னேற்றத்தினை அளவீடு செய்தல் மற்றும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி வள நிலையக் கண்காணிப்புச் செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன.

**“லங்கா வூமன் - ஈ மாக்கட்” தொழில்முனைவோர் தகவல் பரிமாற்றம் மற்றும் ஈ அடைவு**

பெண் தொழில்முனைவோரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களினைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மேற்கூறப்பட்ட சந்தைப்படுத்தல் தளத்தின் மூலம் பெண் தொழில்முனைவோரின் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில் அவர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கும் பிரபலப்படுத்துவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்திற்குள் செல்லுவதற்கு (https://lankawomenemarket.gov.lk) எனற இணையத் தளத்தினைக் கொண்டு பிரவேசிக்க முடியும்.. தற்போது 329 பெண்கள் இத்திட்டத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். பெண்களை திட்டத்தில் உள்வாங்குவது தொடர்பாக கள உத்தியோகத்தர்களுக்கு 03 பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இது குறித்து 316 மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக “லங்கா வூமன் ஈ மாக்கட்” சந்தைப்படுத்தல் தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 53 பெண்கள் தொழில்முனைவோரின் தகவல்களினை உள்ளடக்கிய லங்கா வூமென் ஈ விவரக்கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் பெண் தொழில்முனைவோர்களின் விவரங்கள் மற்றும் அவர்களின் உற்பத்திகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அமைச்சின் யூ ரியுப் செனல் (https://youtu.be/gaWNBVryOsk) மற்றும் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினைக் கொண்டு இதற்குள் உட்பிரவேசிக்க முடியும்.

**“சுகுறுகத” சஞ்சிகை”**

பெண்களின் தகவல் தொழிநுட்ப அறிவு, உளப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்து அவர்களை தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் மூலம் வலுவூட்டும் நோக்கில் "சுகுறுகத" என்ற சஞ்சிகை சிங்கள ஊடகத்தில் வெளியாகியுள்ளது. 2023 ஆம் ஆண்டு தொடர்பில் சுகுறுகத சஞ்சிகையின் ஈ பகுதி (இலத்திரனியல் ஊடகத்தில்) வெளியீடு செய்தல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**உத்தியோகபூர்வ இணையம், யூ ரியுப் செனல் மற்றும் முகநூல் பக்கத்தினை நாளதுவரைப்படுத்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.**

அமைச்சின் காலத்திற்குத் தேவையான தகவல்கள் தொடர்பில் உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டுவதற்கு தொடர்ச்சியாக நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல் இடம்பெற்றுள்ளது. இணையத் தளத்தினை புதிய தோற்றத்துடன் நவீனமயப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இணையத் தளத்தினை நாளதுவரைப்படுத்துல் மும்மொழிலகளிலும் இடம்பெற்று வருகிறது.

**ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் (UNICEF) அனுசரணையுடன் அமுலாக்கப்பட்ட குறுகிய கால ஊட்டச்சத்து உணர்திறன் நிகழ்ச்சித் திட்டம்.**

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினூடாக முல்லைத்தீவு, கேகாலை, கிளிநொச்சி, புத்தளம், அனுராதபுரம், மொனராகல, வவுனியா, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் 05 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்தினை அதிகரிப்பதற்கு விரிவுபடுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைச்சு சார்பில் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
அந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 04 மாதங்கள் வரை ரூபா. 6,750/- மாதாந்தக் கொடுப்பனவொன்று, அக்குழந்தைகளின் தாய்மார்கள்/பராமரிப்பாளர்களுக்கு UNICEF நிறுவனத்தினூடாக நேரடியாக பயன்பெறும் குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வூட்டும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.**

- **செயற்கை நுண்ணறிவு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**
  சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் தேசிய நிகழ்ச்சித் திட்ட தொடர்களுக்கு இணையாக பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு தொடர்பில் சகல மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சுசார் உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டும் 03 நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கை கணனி அவசர பதில் மன்றத்தின் வளங்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டுள்ளது.

- **தகவல் தொழில்நுட்பப் பயிற்சி**
  தகவல் தொழில்நுட்ப அறிவினை வளர்ப்பதற்கும் மற்றும் கணனி அறிவினை மேம்படுத்துவதற்கும் 20 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமைச்சு உத்தியோகத்தர்களுக்கு பௌதிக மற்றும் நிகழ்நிலை ஊடாக (ஒன்லைன்) நடாத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அமைச்சு உத்தியோகத்தர்கள், இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக பொதுத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சியினைப் பெற்றுள்ளனர்.

- **"சுகுறுலிய நிகழ்ச்சித் திட்டம்"**
  "சுகுறுலிய" என்பது, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுடன் இணைந்து 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரை இயங்கி வரும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பெண்கள் சமூகத்தை வலுவூட்டுவதற்கான தற்போதைய திட்டங்களின் ஒரு பகுதியாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக குறிப்பாக தொழில்முனைவோராக முன்னுக்கு வரும் பெண்களுக்கு, தகவல், தொழில்நுட்ப அறிவு, இணையத்தளப் பயன்பாடு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பாவனை தொடர்பில் வழங்கப்படும் அறிவு நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உதவிக்கரமாக இருக்கும். "சுகுறுலிய" முதலாவது கட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்ததன் பின்னர் இரண்டாவது கட்டம் தொடர்பிலான மூலோபாயத் திட்டத்தினை தயாரித்தல் எமது அமைச்சின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டது.

# முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகம்

## முன்னேற்றம் மற்றும் விசேட சானைகள்

**1. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காக அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயன்கள்**

- **கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூபா. 45,000/- ஊட்டச்சத்துக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்**

குடும்பத்தின் மாதாந்த வருமானம் ரூபா. 50,000/- வரையறையினைத் தாண்டாத தாய்மார்களுக்கு கர்ப்பகாலத்தின் இறுதி 06 மாதங்களுக்கும் மற்றும் பாலூட்டும் முதல் நான்கு மாதங்களுக்கும் தேவையான ஊட்டச்சத்து உணவுப் பொருட்களினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ரூபா. 45,000/- பெறுமதியினைக் கொண்ட வவுச்சர்கள் வழங்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களினையும் உள்ளடக்குமாறு அமுலாக்கப்படும்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2023.12.31 ஆந் திகதியன்று 231,346 கர்ப்பிணித் தாய்மார்களுக்காக ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 5,999,333 மில்லியனாகும்.

- **பேரிக்காய் குழந்தைகள் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்**

குறைந்த வருமானத்தினைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட தாய்மார்களுக்கு குழந்தை ஆரோக்கியப் பொருட்களினை (ரூபா. 4,500/- பெறுமதியுடனான) வழங்குதல் மற்றும் தாய்மார்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பகா மற்றும் களுத்துறை மாவட்டம் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் வலப்பன பிரதேச செயலகப் பிரிவில் அமுலாக்கப்பட்டுள்ளது. இதில் கொழும்பு மாவட்டத்தின் பயனாளிகள் 1225, கம்பகா மாவட்டத்தின் பயனாளிகள் 1181, களுத்துறை மாவட்டத்தின் பயனாளிகள் 1288, நுவரெலியா மாவட்டாத்தின் வலப்பன பிரதேச செயலகப் பிரிவின் பயனாளிகள் 150 மற்றும் யாழ் மாவட்டத்தின் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் பயனாளிகள் 150 பேர் என 3,994 மொத்தப் பயனாளிகளுக்கு யூனிலிவர் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

## 2. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயன்கள்

- **முன் பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவொன்றினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் - குரு அபிமாணி**

முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையினை மதிப்பீடு செய்தல் மற்றும் துறையின் தரத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அமுலாக்கப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவொன்றினை வழங்கும் குரு அபிமாணி நிகழ்ச்சித் திட்டம் 2023 ஆம் ஆண்டில் 25 மாவட்டத்தினை உள்ளடக்குமாறு அமுலாக்கப்பட்டுள்ளதுடன், 2023.12.31 ஆந் திகதியன்று 15,638 பயனாளி ஆசிரியர்களுக்காக ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 424.219 மில்லியனாகும்.

- **முன்பள்ளி ஆசியர் பயிற்சி டிப்ளோமா நிறுவனங்களினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு துணைக்குழு**

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட 63 ஆசிரியர் டிப்ளோமா நிறுவனங்களில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் மீளவும் பரிட்சித்துக் குறைபாடுகளினைத் தயாரித்தல் மற்றும் புதிய பதிவினைக் கோரியுள்ள ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா நிறுவனங்களினைப் பதிவு செய்வதற்குத் தேவையான அளவுகோல்களினைத் தயாரித்தல் இத்துணைக்குழுவின் பிரதான நோக்கமாவதுடன், 2023 ஆம் ஆண்டு தொடர்பில் 03 துணைக் குழு அமர்வுகள் நடைபெற்றுள்ளன. இந்நிறுவனங்களினை பரிட்சிப்பதற்கு அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளதுடன், அவ் அளவுகோல்களினை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகளினை ஒழுங்குபடுத்துவதற்கு எண்ணப்பட்டுள்ளது.

## 3. முன்பள்ளி சிறார்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயன்கள்

- **முன்பள்ளிக் குழந்தைகளுக்கான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு காலையுணவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்.**

நிறைகுறைந்த முன்பள்ளிக் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேலோங்கச் செய்யும் நோக்குடன் 2022 ஆகஸ்டு 01 ஆந் திகதி தொடக்கம் 2023 மே 15 ஆந் திகதி வரை உலக வங்கி செயற்திட்டத்தின் நிதியுதவியின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், 2023 மே 15 ஆந் திகதியிலிருந்து உலக வங்கி செயற்திட்டம் நிறைவடைவதன் காரணமாக, இந் நிகழ்ச்சித் திட்டம் 2023 மே 15 ஆந் திகதியின் பின்னர் திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களினையும் உள்ளடக்கும் வகையில் பெருந்தோட்ட மற்றும் தோட்டம் சாரா 4487 முன்பள்ளிகளின் 129,914 சிறார்கள் மற்றும் 215 தோட்ட முன்பள்ளிகளின் 4219 சிறார்களுக்கு ஈடு செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 707,631 மில்லியனாகும்.

## 4. அமுலாக்கப்பட்ட பிற நிகழ்ச்சித் திட்டங்கள்

- **முன்பிள்ளைப்பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான தேசிய ஒருங்கிணைப்புக் குழு**

தேசிய மட்டத்தின் திட்டமிடலின்போது, அமுலாக்கலின்போது மற்றும் முன்பிள்ளைப்பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான செயற்பாடுகளில் தேசிய மட்டத்திலிருந்து அடி மட்டம் வரையிலான பல்துறை

ஒத்துழைப்பினை உறுதி செய்தல், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் தேசிய மட்டத்தில் தீர்மானங்களினை எடுத்தல் இக்குழுவின் நோக்கமாவதுடன், 2023.12.31 ஆந் திகதியன்று சகல பங்குதாரர்களினையும் பிரதிநிதித்துவப்படுத்தி 3 குழு அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

- **முன்பிள்ளைப்பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான தேசியக் கொள்கை - 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கான ஐந்தாண்டு பல்துறை செயற்திட்டத்தினைத் தயாரித்தல்.**

முன்பிள்ளைப்பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான தேசியக் கொள்கை - 2018 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கான ஐந்தாண்டு பல்துறைசார் செயற்திட்டத்தினைத் தயாரித்தல் இது வரையில் யுன்செவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையின் கீழ் நிறைவு பெற்றுள்ளது. அதன் பிரகாரம் 2024 - 2028 வரையில், சகல பங்குதாரர் நிறுவனங்களினையும் தொடர்புபடுத்தி இச்செயற்திட்டத்தினை அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்**

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமைச் செயற்பாடுகளுக்கு இணைப்புச் செய்யப்பட்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்பினை விளைத்திறனாக மதிப்பீடு செய்தல் தொடர்பில் பிரதான அலுவலகத்துடன் தொடர்புபடுத்தி மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் ஒன்லைன் மூலம் காலாண்டுக்கு 1 என்றவாறு 4 காலாண்டு நிறைவில் 04 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- **வீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப்பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான செயற்றதிட்டம்**

தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்ப அலகுகளுக்கு தேவையான மத்தியஸ்தம் மற்றும் வழிகாட்டுதலின் மூலம் வீட்டில் குழந்தையின் சிறந்த நலன்கள் மற்றும் வளர்ச்சிக்கு அனுமதிக்கும் குழந்தை நட்பு சூழலை உருவாக்குதல், குழந்தைப் பருவ வளர்ச்சி மற்றும் பராமரிப்பு தொடர்பான பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்,, குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்தல், குடும்பத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம். குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் குறைத்தல், கவனத்திற்கொள்ளக்கூடிய மற்றும் விசேட தேவைகளினைக் கொண்ட சிறார்களினை முன்கூட்டியே இனங்காணுதல் மற்றும் தேவையான சேவைகளுக்கு முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டு இச்செயற்திட்டம் அமுலாக்கப்படுகிறது. அதில் 2023 ஆம் ஆண்டு தொடர்பில் சகல பிரதேச செயலகங்களினையும் உள்ளடக்கும் வகையில் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுவதுடன், 2023.12.31 ஆந் திகதியன்று 630 குடும்ப அலகுகளினை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5. ஒதுக்கீடுகளில்லாமல் அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்

- **பிரதேச செயலகமொன்றுக்கு தரப்படுத்தப்பட்ட ஐந்து முன்பள்ளிகளினை உருவாக்கும் செயற்திட்டம்.**

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களின் தரம் மற்றும் பௌதிக வளர்ச்சியினை உயர் மட்டத்தில் முன்னெடுக்கும் நோக்குடன் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்தினால் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பிலான தேசியத் தரநிலைகள் நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கு இணையாக சகல பிரதேச செயலகங்களினையும் உள்ளடக்கும் வகையில், ஒரு பிரிவில் குறைந்த பட்ச தரத்தினை எட்டாத முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் 4 என்றவாறு தெரிவு செய்து அவற்றினை தரத்திற்குக் கொண்டுவருவதற்கும், ஆரோக்கியத்தினை ஊக்குவிக்கும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையமொன்றாக உருவாக்குவதற்கும் 2023 ஆம் ஆண்டில் அமுலாக்குதல் இச் செயற்திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதேபோல, 2023 ஆம் ஆண்டில் சகல பிரதேச செயலகங்களில் 1356 முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களினை இலக்காகக் கொண்டு இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுவதுடன், 2023.12.31 ஆந் திகதியன்று 1060 முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களின் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. 2023 ஆகஸ்டு மாதம் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பகா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 09 பிரதேச செயலகங்கள் தொடர்பில் கள அவதானிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- **முன்பிள்ளைப்பருவப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான தேசிய வாரம்**

ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 14 ஆந் திகதி தொடக்கம் 20 ஆந் திகதி வரை முன்பிள்ளைப்பருவ விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய சகல தரப்பினரினையும் ஒன்றிணைத்து, முன்பிள்ளைப்பருவக் குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அபிவிருத்தியினை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள், தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் கிராம மட்டத்தில் நடாத்துதல் இடம்பெற்றுள்ளது. அதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய வாரக் கொண்டாட்டம், "முன்பிள்ளைப்பருவத்தினை அன்புடன் வளர்ப்பதற்கு அனைவரும் ஒன்று கூடுவோம்" என்ற தொனிப்பொருளினைக் கொண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. அதன் கீழ,

- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பில் அரச உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செத்சிறிபாய கட்டம் 1 மற்றும் கட்டம் 2 இல் உள்ள 25 பிரிவுகளின் 500 உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுதல்.
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான கொள்கை வகுப்பாளர்களுடன் முன்பிள்ளைப்பருவ தேசியக் கொள்கைச் செயற்பாட்டுச் செயல்முறை தொடர்பிலான இரண்டு நாள் வேலைத்திட்டமொன்றினை நடாத்துதல்,
- 200 கர்ப்பிணித் தாய்மார்களினை இலக்காகக் கொண்டு களனிப் பிரதேச செயலகப் பிரிவினுள் விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக மேல் மாகாணத்தின் (களுத்துறை, கம்பகா மற்றும் கொழும்பு) 40 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 40,000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் யூனிலிவர் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் முன்னெடுக்கப்படுதல்.
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 255 பிரதேச செயலகப் பிரிவுகளினுள் நடாத்தப்படுதல்.

- **உலக சிறுவர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டம்**

உலக சிறுவர் தின தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு - 2023 இணையாக "எல்லாவற்றிற்கும் மேலாக குழந்தைகள் விலைமதிப்பற்றவர்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் சகல பிரதேச செயலகப் பிரிவுகளினையும் உள்ளடக்குமாறு செயலாக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் வீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பில் பெற்றோர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. 322 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 47,461 ஆகும்.

- **முகநூல் பக்கம் மற்றும் யூ ரியுப் ஊடகத்தினூடாக முன்பிள்ளைப்பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான வீடியோ மற்றும் பிரச்சாரங்களினூடாக ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் (Face book and YouTube (Videos, Post) Media Promotion)**

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்தினூடாக உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் மற்றும் யூ ரியுப் அலைவரிசை அமுலாக்கப்படுகிறது. (NSECD Face book, NSECD YouTube Channel) அதன் கீழ் முன்பிள்ளைப்பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் தயாரிக்கப்பட்ட பிரச்சாரங்கள் மற்றும் வீடியோ நாடாக்கள், 71 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் சமூக ஊடகத்தில் 2023 ஆம் ஆண்டு நிறைவில் வெளியிடப்பட்டுள்ளது.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

- **1929 குழந்தைகள் உதவிச்சேவை தொலைபேசி எண்**

சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பிலான பொது முறைப்பாடுகளினை ஏற்றுக் கொள்ளுதல் இதன் பிரதான நோக்கமாகும். இதனூடாக உடல், உள, பாலியல் துஸ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு தொடர்பிலான பொது முறைபாடுகளினை ஏற்றுக்கொள்ளுதல் 24 மணி நேரமும் இடம்பெறுகிறது. 2023.12.31 ஆந் திகதியன்று 1929 தொலைபேசிச் சேவைக்கு 119,173 அழைப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், முறைப்பாடுகளாக 8,469 அழைப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பில் ஒட்டுமொத்த நிதி இலக்கு ரூபா. 0.850 மில்லியனாகும். 2023.12.31 ஆந் திகதியன்று ஈடு செய்யப்பட்டுள்ள செலவு ரூபா. 0.428 மில்லியனாகும்.

- **பள்ளிக் குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்களினை நிறுவும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் (சுரக்கும் பவ்வ)**

கட்டாயக் கல்விக்கான உரிமையை ஏற்படுத்துதல் மற்றும் அக் குழந்தைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல், பள்ளிகளில் பள்ளிக் குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதன் நோக்கமாகும். 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் பிரகாரம், கல்வி அமைச்சுடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இந்நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுக்கிறது. 2023 ஆம் ஆண்டில் 783 பாடசாலை பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், பள்ளிச் சிறுவர்கள் பாதுகாப்புக் குழு மதிப்பீடு செய்யும் செயற்பாட்டிற்கு பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 986 ஆகும். பயனாளிகளின் எண்ணிக்கை 61,590 ஆகும், இது தொடர்பில் மொத்த நிதி இலக்கு ரூபா. 3 மில்லியனாகும். 2023.12.31 ஆந் திகதியன்று ஈடு செய்யப்பட்டுள்ள செலவு ரூபா. 2.804 மில்லியனாகும்.

- **சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தேசியக் கொள்கைக்கான சட்டக் கட்டமைப்பினை வலுப்படுத்துதல்.**

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14 (e) இன் பிரகாரம் சிறுவர் துஸ்பிரயோகத்தினைத் தடுப்பதற்கான தேசியக் கொள்கையினை திறம்பட செயற்படுத்துவதற்கு தேவையான சட்ட, நிர்வாக அல்லது பிற திருத்தங்களினை பரிந்துரை செய்வதனூடாக பொருந்தக்கூடிய சட்டத்தினை அவ்வப்போது திருத்துவதன் மூலம் சிறுவர் துஸ்பிரயோகத்தினைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுத்தல் இதன் அடிப்படை நோக்கமாகும். பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுமிகளின் கர்ப்பத்தை மருத்துவ ரீதியாக நிறுத்துவது தொடர்பான தற்போதைய சட்டத்தின் திருத்தத்தில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள், பொதுப் போக்குவரத்துச் சேவையை இயக்கும் சேவையின் உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளைக் கூறும் சட்டம், ஒழுங்குமுறை அல்லது வழிகாட்டுதல் ஏதேனும் உள்ளதா என்பதைக் கண்டறிதல், சிறுவர் துஷ்பிரயோகக் குற்றங்களில் தண்டனை பெற்றவர்கள் குழந்தைகளுடன் வேலை செய்வதைத் தடுப்பதற்கு சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் குழந்தைகளுக்கான பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பான விடயங்களும் ஆய்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது. இது தொடர்பில் மொத்த இலக்கு ரூபா. 1 மில்லியனாகும். 2023.12.31 ஆந் திகதியன்று ஈடு செய்யப்பட்டுள்ள செலவு ரூபா. 0.856 மில்லியனாகும்.

- **விசேட விசாரணைகள், விசாரணை ஒழுங்கு முறை, குற்றவியல் நடவடிக்கைகளினை ஒழுங்குபடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் தெடர்பிலான சைபவர் ஒழுங்குமுறைச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.**

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும். அதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வளாகத்தில் உள்ள விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினால் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பான விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு இதுவரை 2,158 முறை நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளது. மேலும் சட்டத்துறை, 37 முறை நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளது. 1,419 பேருக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது. மொத்த நிதி இலக்கு ரூபா. 3.50 மில்லியனாகும். 2023.12.31 ஆந் திகதியன்று ஈடுசெய்துள்ள செலவு ரூபா. 6.015 மில்லியனாகும்.

- **குழந்தை நட்பு காணொளி சாட்சியப் பதிவு அலகுகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் உரிமைகள் மீறப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவளித்தல்.**

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் குழந்தைகள் இரண்டாம் நிலை பாதிக்கப்பட்டவர்களாக மாறுவதை தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காணொளி சாட்சியப் பதிவுப் பிரிவு மற்றும் தென் கொழும்பு போதனா வைத்தியசாலையில் (இராகம) சிறுவர் நட்புறவு காணொளிச் சான்று பதிவுப் பிரிவினால் சிறுவர்களின்

சாட்சியங்களின் காணொளிப் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. 242 காணொளி சான்றினைப் பதிவு செய்தல் நிறைவு பெற்றுள்ளது. மொத்தம் 222 பதிவு செய்யப்பட்டுள்ள காணொளிகள் நீதிமன்றத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மொத்த நிதி இலக்கும் ரூபா. 1 மில்லியனாகும் என்பதுடன், 2023.12.31 ஆந் திகதியன்று ஈடு செய்யப்பட்டுள்ள செலவு ரூபா. 0.785 மில்லியனாகும்.

- **தேசிய குழந்தை மையமான உளவியல் சமூக உதவிச் சேவை**

பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தின் அபாயத்தைத் தடுத்தல், கல்விக்கு உதவுதல், மற்றும் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் இதன் முக்கிய நோக்கங்களாகும். இதனூடாக சிறுவர்களினை மையமாகக் கொண்ட உளவியல் ஆதரவு வழங்கப்பட்டுள்ள 783 சிறுவர்களுக்கு உளவியல் சமூக உதவி மற்றும் தலையீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 397 முறை பின்தொடர்தல் இடம்பெற்றுள்ளது. அதேபோல அதற்கு மேலாக 157 உளவியல் ஆலோசனைகளும் மற்றும் 26 வழக்கு மாநாடுகளும் நடாத்தப்பட்டுள்ளன. மொத்த நிதி இலக்கு ரூபா. 1 மில்லியன் என்பதுடன், 2023.12.31 ஆந் திகதியன்று ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 1.369 மில்லியனாகும்.

- **சுவீகரிப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுதல் மற்றும் கண்காணித்தல்.**

2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் காவலை ஆய்வு செய்தல், குழந்தைகளின் சிறந்த நலன்களை உறுதி செய்யும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான பரிந்துரைகளை வழங்குதல். அனைவருக்கும் கல்வி என்ற நிலையான கருப்பொருளின் கீழ், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற குழந்தைகளுக்கு கல்வி வசதிகளை வழங்குதல் மற்றும் அவர்களின் கல்வி உரிமைகளைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கங்களாகும். இதன் கீழ் தற்போது 17 குழந்தைகளுக்கு கல்விசார் உதவி வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன், 02 சுனாமி சபைகள் நடாத்தப்பட்டுள்ளன. மொத்த நிதி இலக்கு ரூபா. 1 மில்லியன் என்பதுடன், 2023.12.31 ஆந் திகதியன்று ஈடு செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு ரூபா. 0.569 மில்லியனாகும்.

- **சிறுவர் பாதுகாப்பு நிலையங்களினைக் கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.**

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரிவு 14 (c) இன் பிரகாரம், குழந்தைகளுக்கான குழந்தை பராமரிப்பு சேவைகளை வழங்கும் அனைத்து மத மற்றும் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் குழந்தை மேம்பாட்டு நிலையங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் சிறுவர்களுக்கான 03 சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை மேற்பார்வை செய்வது தொடர்பான அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமும் நடத்தப்பட்டுள்ளன. 306 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிதி இலக்கு ரூபா. 1 மில்லியன் என்பதுடன், 2023.12.31 அன்று ஈடு செய்யப்பட்டுள்ள செலவு ரூபா. 0.658 மில்லியனாகும்.

- **விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்**
- **பாடசாலைத் தலைவர்களுக்கான "மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித் திட்டம்" மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான "பல்கலைக்கழகத் தூதுவர்" தேசிய நிகழ்ச்சித் திட்டம்**

மூத்த பாடசாலை மாணவர் தலைவர்கள் மற்றும் பல்கல்கலைக்கழக மாணவர்களின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான அறிவு, திறன் மற்றும் உளப்பாங்கு விருத்தி இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்காக மாணவர் தலைவர்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பாடசாலை சமூகத்திற்கு சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல் இடம்பெறுகிறது. புதிதாக பதிவு செய்யப்பட்ட பள்ளிகளின்

எண்ணிக்கை 532 ஆகும். 24 மாவட்ட மாணவர் தூதுவர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினையும் மற்றும் 09 மாவட்ட மாநாடுகளினையும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பில் குழந்தைகள் மற்றும் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டுவதற்கு பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசியக் கொள்கையினை அமுலாக்கும்போது பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தேசியக் கொள்கையினை மேம்படுத்துதல் போன்றன இதில் எதிர்பார்க்கப்படுகிறது. 2265 பல்கலைக்கழக மாணவர்களுக்கு 08 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான மொத்த நிதி இலக்கு ரூபா. 3.50 மில்லியன் என்பதுடன், ஈடு செய்யப்பட்டுள்ள செலவு ரூபா. 2.696 மில்லியனாகும்.

- 10 **தொடர்புடைய சிறுவர் பாதுகாப்புத் துறைகளில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து ஆலோசனை, விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கான வளங்களின் பங்களிப்பு மற்றும் கருவிகளினை மேம்படுத்துதல்.**

இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், முதுநிலை மருத்துவப் பட்டதாரி நிறுவனத்தில் கற்கும் மருத்துவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் செவிலியர்களால் தேசிய சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் தேசிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சிறுவர் பாதுகாப்பில் அதிக உணர்திறன்கொண்ட தொழில்வாண்மையாளர்களினை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்காகும். 2023 ஆம் ஆண்டில் 16 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. பயனாளிகளின் எண்ணிக்கை 3571 ஆகும். மொத்த நிதி இலக்கு ரூபா. 1.20 மில்லியன் என்பதுடன், ஈடு செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 1.143 மில்லியனாகும்.

- **சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தேசியக் கொள்கை குறித்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் அரச துறையின் உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டுதல்.**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தேசியக் கொள்கை குறித்து மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் சிறுவர் செயற்பாட்டுத் துறையின் உத்தியோகத்தர்களுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையினை மேம்படுத்துதல் இதன் நோக்கமாகும். இதன் கீழ் ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 40 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டுள்ளது. பயனாளிகளின் எண்ணிக்கை 1918 ஆகும், மொத்த நிதி இலக்கு ரூபா. 2.00 மில்லியனாகும். ஈடுசெய்யப்பட்ட செலவு ரூபா. 1.940 மில்லியனாகும்.

- **குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கும் மற்றும் அதற்குப் பதிலளிப்பதற்கும் சமூகம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள்**

இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், பிரதேச மட்டத்தில் சமூகத்தில் குழந்தைப் பாதுகாப்பினை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள், மத குருமார்கள், பாதிரியாளர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. இது தொடர்பில் மொத்த நிதி இலக்கு ரூபா. 3.500 மில்லியனாகும். ரூபா. 3.058 மில்லியன் செலவு ஈடு செய்யப்பட்டு 165 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் பயனாளிகளின் எண்ணிக்கை 7880 ஆகும்.

இந்த முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலாக, ஓரங்கட்டப்பட்ட, ஆபத்திலுள்ள, பாதிக்கப்படக்கூடிய, பார்வையற்ற குழந்தைகள் மற்றும் குழந்தை துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கல்வி உதவி அல்லது உரிய உதவியினை வழங்குதல், குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான ஊடகங்கள் மற்றும் தகவல் தொடர்பு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- **ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF)**

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினூடாக சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர்/உதவி தொலைபேசிச் சேவையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 3.142 மில்லியனாகும். மொத்த நிதி இலக்கு ரூபா. 7.500 மில்லியனாகும்.

## இலங்கை மகளிர் பணியகம்

### முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

- பெண்கள் ஒரே அமைப்பில் (Smooth Functioning) செயல்படுவதற்கு சமூக மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை ஒரே வலையமைப்பில் பெண்களை அமைப்பதன் கீழ் புதிய தேசிய பெண்கள் சபை அரசியலமைப்பை நிறுவுதல்.
- வரவு செலவுத் திட்ட முன்மொழிவு 48.1 இன் கீழ் விதவைப் பெண்களை வீட்டுத் தொழில்முனைவோராக வலுப்படுத்துவதற்கு ரூபா 62.5 மில்லியன் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 639 செயற்திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- பாதீட்டு இலக்கம் 65.1 முறைசாரா வீட்டுத் தொழில்களில் ஈடுபடும் இளம் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கு, பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து கடன் முன்மொழிவுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- புதிய தற்காலிகப் பாதுகாப்பு நிலையமொன்றினை மொனராகல மாவட்டத்தில் அமைத்தல்.
- 2023 சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து 200 பெண் தொழில்முனைவோரின் பங்களிப்புடன் தொழில் முனைவோர் தயாரிப்பு கண்காட்சி மற்றும் சந்தையை நடத்துதல்.
- 2023 சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து 25 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு 'சிறந்த பெண் தொழில்முனைவோரினை' இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்..
- மகளிர் மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் மூலம் UNFPA அனுசரணையுடன் பாலின பிரச்சினைகள் குறித்த பாடநெறியொன்றினை நடத்துதல்.

அதன் பிரகாரம் பெண்களினை, ஒரே வலையமைப்பில் அமைத்தல். இலங்கைப் பெண்களினை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டுவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை இனங்காணுதல், திட்டமிடுதல், அமுலாக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல் இடம்பெறுகிறது. அதன் கீழ்,

- நகர்ப்புற பெண்களினை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டில் 16 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 16 ஆகும். மொத்த நிதி இலக்கு ரூபா. 1.70 மில்லியன் என்பதுடன், அதன் ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 1.66 மில்லியனாகும்.
- கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வீட்டுத் தலைமைப் பெண்கள் குடும்பங்களின் வலுவூட்டலுக்கான தேசிய நிலையத்தை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டத்தினூடாக 02 செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதுடன் பயனாளிகளின் எண்ணிக்கை 08 ஆகும், மொத்த நிதி இலக்கு ரூபா. ஒரு மில்லியன் என்பதுடன் ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 0.97 மில்லியனாகும்.
- திரிய மங்பெத நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 21 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன் அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 170 ஆகும். எதிர்பார்க்கப்பட்ட பௌதிக இலக்கு 18 செயற் திட்டங்களாக இருந்த போதிலும், முன்வைக்கப்பட்ட திட்டங்களின் பெறுமதிக்கு ஏற்ப ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு வரம்பிற்குள் 03 புதிய செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். மொத்த நிதி இலக்கு ரூபா. 6.5 மில்லியன் என்பதுடன், ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 6.13 மில்லியனாகும்.
- விசேட செயற்திட்டங்களினூடாக பெண்களினை வலுவூட்டுதலின் கீழ் 4 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன்,. அதன் பயனாளிகள் 27 பேராகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. 3.5 மில்லியனாகும் என்பதுடன் ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 1.99 மில்லியனாகும்.
- மீன்பிடி தொடர்புடைய குடிசைத் தொழில்களில் பெண்கள் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு 20 செயற்த்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 20 ஆகும். அதன் மொத்த இலக்கு ரூபா. 0.5 மில்லியனாகும் என்பதுடன் ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 0.5 மில்லியனாகும்.
- பேரிடருக்குப் பிந்தைய சூழ்நிலைகளில் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்பினைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதன் (பெண்கள் பணி அமைப்புக்களுக்கு) கீழ் 04 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. பயனாளிகளின் எண்ணிக்கை 04 ஆகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. 0.2 மில்லியனாகும் என்பதுடன், ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 0.2 மில்லியனாகும்.

- வீட்டு வேலைக்காக மத்திய கிழக்கு நாடுகளில் புலம்பெயர்ந்து செல்லும் பெண்களின் பொருளாதாரம், குடும்பப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு மாற்று வருமானம் உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை செயலாக்கி 10 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 10 ஆகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. 0.5 மில்லியனாகும் என்பதுடன் ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 0.5 மில்லியனாகும்.
- குறிப்பிட்ட காரணங்களினால் சமூக உணர்வை இழந்த பெண்களின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தினை வலுவூட்டுதல். ("வாழ்க்கைக்கு அர்த்தம்") நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்கி 31 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 31 ஆகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. 1.5 மில்லியன் என்பதுடன், ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 1.41 மில்லியன் ஆகும். பௌதிக இலக்காக 15 செயற்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கும் மற்றும் ஒரு செயற்திட்டம் தொடர்பில் ரூபா ஒரு இலட்சம் என்றவாறு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டபோதிலும் விலை உயர்வின் காரணமாக சிறியளவிலான செயற்திட்டங்கள் அதிகளவு என்பதால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளது.
- சிறைவாசம் அனுபவிப்பவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், அக் குடும்பங்களினை விழிப்புணர்வூட்டுவதற்குமாக 08 செயற்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 08 ஆகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. 0.5 மில்லியன் என்பதுடன், ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 0.5 மில்லியனாகும்.
- பெருந்தோட்டத் துறையில் பெண்களினை வலுவூட்டுவதற்காக 10 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 10 ஆகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. 0.5 மில்லியன் என்பதுடன், ஈடுசெய்யப்பட்ட செலவு ரூபா. 0.5 மில்லியனாகும்.
- முறைப்படுத்தப்படாத நுண்நிதிக் கடன் முன்மொழிவுத் திட்டங்களினால் பாதிக்கப்பட்ட கிராமப்புற பெண்களுக்கு நிவாரணம் வழங்குவதன் கீழ் 76 செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டபோதிலும் ஒரு செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆகக்கூடிய நிதி ரூபா. 50,000 என்பதுடன், அதனை விடக் குறைவான செயற்திட்டங்களுக்கு செலவு செய்யப்பட்டதால் மீதமான நிதி மேலும் செயற்திட்டங்கள் தொடர்பில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் 86 செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்கு முடிந்துள்ளது. அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 93 ஆகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. 3.8 மில்லியன் என்பதுடன், ஈடுசெய்யப்பட்ட செலவு ரூபா. 3.73 மில்லியனாகும்.
- மகளிர் தினத்திற்கு இணையாக தொழில்முனைவோர் பெண்களினை மேம்படுத்தும் விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதான நிகழ்வுடன் இணைந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன மொத்த நிதி இலக்கு ரூபா. ஒரு மில்லியனாகும். எனினும் அது தொடர்பில் Unilever, UNFPA, UN Women என்ற நிறுவனத்தின் அனுசரணையினைப் பெற்று ரூபா. 4.31 மில்லியன் ஒதுக்கீடு ஈடுசெய்யப்பட்டுள்ளது.
- சந்தை மேம்பாடு, பெண்கள் தயாரிப்புக் கண்காட்சிகள்' மற்றும் சந்தைக் கண்காட்சிகளினை நடாத்துவதன் கீழ் மகளிர் தினத்தின் பிரதான நிகழ்வினை நடாத்துதல் மற்றும் 25 மாவட்டங்களின் 25 தொழில்முனைவோர்கள் பாராட்டுக்கு உட்படுத்தப்படுதல். அதற்கு இணையாக வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் நடமாடும் விற்பனைக் கடைகளை நடத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக, அதற்கான ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு திறைசேரி அனுமதி வழங்கவில்லை.
- வருமானத்தினைப் பெருக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 31 நடாத்தப்பட்டு 775 பயனாளிகளுக்கு பயன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 30 ஆகும். ஒரு செயற்திட்டம் தொடர்பில் ஒதுக்கப்பட்ட ஆகக்கூடிய நிதியினை விடக் குறைவான செயற்திட்டங்களுக்கு செலவு செய்யப்பட்டமையினால் மீதமான நிதி மேலும் ஒரு செயற்திட்டம் தொடர்பில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.
- 18 வயதிற்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கு வாழ்வாதாரம் மற்றும் நலன்புரி வசதிகளினை வழங்குதலின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை 12 ஆகும். 20 பயனாளிகளுக்கு இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதிலும் பயிற்சி தொடர்பில் கோரிக்கை விடுத்த பிள்ளைகளில் தகைமைகளனைப் பூர்த்தி செய்திருந்தவர்கள் 12 பேர் மாத்திரமேயாகும். அதன் மொத்த நிதி இலக்கு ரூபா. ஒரு மில்லியன் என்பதுடன் ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. ஒரு மில்லியனாகும்.

- அங்கவீனப் பெண்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தி வலுவூட்டுதலின் கீழ் 10 செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்கு எதிர்பார்த்தபோதிலும் 2023 ஆம் ஆண்டின் நிறைவில் 20 பயனாளிகளுக்கு 20 செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்கு முடிந்துள்ளது. ஒரு செயற்திட்டம் தொடர்பில் ஒரு இலட்சம் என்றவாறு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டபோதிலும் விலை உயர்ந்தமையின் காரணமாக சிறியளவிலான அதிக செயற்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன,
- செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள், மகளிர் தின மகளிர் சஞ்சிகைகள் 150, மற்றும் 100 கடமை அறிக்கைப் புத்தகங்களினை அச்சிட்ட செலவுகள், இணையப் பராமரிப்பு தொலைபேசிக் கட்டணக் கொடுப்பனவுகள் போன்ற ஊடகச் செயற்பாடுகளுக்கு 2023 ஆம் ஆண்டில் நிதி இலக்கு ரூபா. 2.4 மில்லியன் என்பதுடன், ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 2.39 மில்லியனாகும்.
- கண்காணிப்பு, பின் தொடர்தல் மற்றும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வின் கீழ் மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 20, 50 கண்காணிப்பு மற்றும் பின் தொடர்தலினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டபோதிலும் செலவுகளினைக் கட்டுப்படுத்துதல், ஒன்லைன் மூலம் கூட்டங்களினை நடாத்துதல் மற்றும் எழுத்து மூலம் ஆலோசனைகளினை அனுப்பியமையின் காரணமாக மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 6 நடாத்தப்பட்டுள்ளதுடன், கொழும்பு, களுத்துறை, கம்பகா தொடர்பில், கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் 03 நடாத்தப்படுதல். அது தொடர்பில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 187 ஆகும். அது தொடர்பிலான செலவு இலக்கு ரூபா. 1.2. மில்லியன் என்பதுடன் ஈடுசெய்யப்பட்ட செலவு ரூபா. 0.13 மில்லியனாகும்.
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளினை தடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குவதன் மூலம், கம்பகா, இரத்தினபுரி, கொழும்பு, மாத்தறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் - (2 நிலையங்கள்) போன்ற மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள 09 மகளிர் பாதுகாப்பு நிலையங்களினை முன்னெடுத்துச் செல்லுவதற்காக செலவுகள் ஈடு செய்யப்பட்டுள்ளதுடன், அந்நிலையங்களிலுள்ள 509 சேவைநாடியினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான நிதி இலக்கு ரூபா. 12.497 மில்லியன் என்பதுடன், ஈடுசெய்யப்பட்ட செலவு ரூபா. 11.947 மில்லியனாகும்.
- களுத்துறை, அனுராதபுரம், மொனராகல, நுகத்தலாவ, குருனாகல், இரத்தினபுரி, கட்டுநாயக்க, கேகாலை, மாத்தறை, காலி, கண்டி மற்றும் கம்பகா மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் 12 ஆலோசனை நிலையங்களின் நிர்வாகச் செலவுகளினை ஈடு செய்வதற்கான நிதி இலக்கு ரூபா. 1.203 மில்லியன் என்பதுடன், ஈடு செய்யப்பட்ட செலவு ரூபா. 1.20 மில்லியனாகும்,. 2023 ஆம் ஆண்டில் இந் நிலையங்களின் மூலம் 2901 சேவைநாடியினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## தேசிய மகளிர் குழு

### முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

#### உள்ளூர் நிதியினைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- **இணைய வன்முறை, போக்குவரத்தின்போது இடம்பெறும் கொடுமைப்படுத்தல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பில் உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்**

பொதுப் போக்குவரத்திலும் மற்றும் இணையத்திலும் பதின்ம வயதினருக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் இளமைப் பருவத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்ளுவதற்கான அறிவு, திறன் மற்றும் உளப்பாங்கு விருத்தியினை நோக்காகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டம் 2023 ஆம் ஆண்டில் குருனாகல், கண்டி, கம்பகா மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் நடாத்தப்பட்டது.

- **திருமணத்தை எதிர்பார்க்கும் இளைஞர்கள் யுவதிகளுக்கு (மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு) திருமணத்திற்கு முந்தைய ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.**

திருமணத்தின் பின்னர் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் மோதல்களைக் குறைத்து வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கும் நோக்கத்துடன்.

2023 ஆம் ஆண்டில் கம்பாந்தோட்டை, மொனராகல, அம்பாறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன,

- **பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல்களை குறைப்பதற்கு தொழில்துறையிலுள்ள தொழிலாளர்களினை விழிப்புணர்வூட்டுதல்.**

இலங்கை முதலீட்டுச் சபை உள்ளிட்ட தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்வருடத்தில் குருனாகல், கம்பகா, காலி, கேகாலை மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் 11 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- **மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகுகளின் உத்தியோகத்தர்களினை பயிலுனர்களாக திறனினை விருத்தி செய்தல்.**

சர்வதேச மகளிர் தினத்திற்கு நிகராக 2023 ஆம் ஆண்டில் களுத்துறை, குருனாகல் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் சைபர் குற்றச்சாட்டினைத் தடுப்பது தொடர்பில், அமைச்சின் கீழுள்ள மாவட்டச் செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. .

- **பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சைபர் கிரைம் ஆகியவற்றைக் குறைப்பதற்கு இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களை அணிதிரட்டுவதற்கான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

இணையத்தைப் பயன்படுத்தும் போது இளைஞர்கள் யுவதிகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் இதுபோன்ற பிரச்சினைகளை எவ்வாறு வெற்றிகரமாக கையாள்வது என்பது குறித்த தேவையான அறிவை வழங்கும் நோக்கத்துடனும் மற்றும் அந்த அறிவை கிராமிய மட்டத்திலுள்ள இளைஞர்கள் யுவதிகளிடம் கொண்டு செல்லும் நோக்கிலும் இளம் பாராளுமன்ற உறுப்பினர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று, மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றது.

- **அரசியல் துறையில் பெண்களினை வலுவூட்டுவதற்கு மாவட்ட மட்டத்தின் மகளிர் சபைகளின் பிரதிநிதிகளின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

பெண்களை அரசியலுக்குள் வருவதற்கு ஊக்குவிப்பதற்கும், அரசியலில் நுழைவதற்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் உளப்பாங்கினைக் கொண்ட பெண் தலைவர்களை உருவாக்கும் நோக்கத்துடனும் 21 மாவட்டங்களினுள் இந் நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமான நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் இரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றாக நடாத்தப்பட்டுள்ளதுடன், அங்குள்ள பெண்களுக்கு தத்துவார்த்த மற்றும் நடைமுறைப் பயிற்சி வழங்கப்பட்டது.

**வெளிநாட்டு நிதியினைப் பயன்படுத்தி (UNFPA) முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- **பொதுப் போக்குவரத்தில் இடம்பெறும் வன்முறையினைக் குறைக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

"அனைவருக்கும் இனிய பயணம்" பொதுப்போக்குவரத்தில் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைச் செயற்பாடுகளினைத் தடுக்கும் நோக்குடன் இவ்வருடத்தில் கொழும்பு மற்றும் நுவரெலியா போன்ற மாவட்டங்களில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒதுக்கீடுகளினை (UNFPA) பயன்படுத்தி இடம்பெற்ற நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- **பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான 16 வது சர்வதேச தின நிகழ்ச்சித் திட்டம்**

2023 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புக்கான 16 வது சர்வதேச தினத்துடன் இணைந்து, தேசிய மகளிர் குழு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதிகளை (UNFPA நிதி) பயன்படுத்தி நடமாடும் சேவைகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்தியது. அங்கு உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி இரத்தினபுரி மாவட்டத்தில் நடமாடும் சேவையொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு நிதியினைப் பயன்படுத்தி இரண்டு நடமாடும் சேவைகள் நுவரெலியா மாவட்டத்தின் வலப்பன பிரதேச செயலகப் பிரிவு மற்றும் யாழ் மாவட்டத்தின் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு போன்ற இடங்களில் நடாத்தப்பட்டது. அங்கு கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவத்திற்குத் தேவையான உபகரணத் தொகுதிகள் வழங்குதல், ஆலோசனை சேவைகள்,

சட்ட சேவைகள், சுகாதார கிளினிக்குகள், மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல் மற்றும் சுய தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களில், திருமணத்திற்கு முன்னரான ஆலோசனை மற்றும் மாத்தறை மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தில் கல்வியினைப் பெறும் மாணவ மாணவிகளினை விழிப்புணர்வூட்டுதல், கண்டி, காலி, குருனாகல் மற்றும் அனுராதபுரம் போன்ற மாவட்டங்களில் ரியூசன் வகுப்புக்களில் கல்வியினைப் பெறும் மாணவர்களுக்கு சைபர் குற்றங்களினைத் தடுத்தல் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல் இடம்பெற்றுள்ளது.

- **தோட்ட மேற்பார்வையாளர்கள் உட்பட தோட்ட முகாமைத்துவ ஊழியர்களுக்கு, பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்**

தோட்ட சமூகத்தின் சிறந்த வாழ்க்கைத் தரத்தையும் திருப்திகரமான பணிச்சூழலையும் கட்டியெழுப்புவதற்காக, பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சிறுவர் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு குறித்து தோட்ட மேற்பார்வையாளர்கள் உட்பட தோட்ட முகாமைத்துவ மட்ட உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டுதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் நுவரெலியா, களுத்துறை, பதுளை மற்றும் இரத்திபுரி போன்ற மாவட்டங்களில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் உள்நாட்டு ஒதுக்கீடுகள் மற்றும் UNFPA ஒதுக்கீடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- **பாலின அடிப்படையிலான வன்முறையினைத் தடுப்பதற்கு தலையீடு செய்தல்.**

தேசிய மகளிர் குழுவின் செயல்பாடுகளை மேலும் வினைத்திறனாகவும் மற்றும் விளைத்திறனாகவும் முன்னெடுப்பதற்கு மும்மொழிகளிலும் 24 மணிநேரமும் அமுலாக்கப்படும் இலவச 1938 மகளிர் தொலைபேசிப் சேவை மற்றும் முறைப்பாட்டு நிலையமும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டில் 1938 எண் மகளிர் தொலைபேசிச் சேவை தொடர்பில் 2,990 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், முறைப்பாட்டு நிலையத்திலுள்ள முறைப்பாடுகள் 380 ஆகும்.

## முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி செயற்திட்டம்

### முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

இலங்கையில் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தியில் காணப்படும் சிறந்த தேவைகள் மற்றும் பிரச்சினைகளினைக் கவனத்திற் கொண்டு முதலாவது தடைவையாக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி செயற்திட்டம் உலக வங்கியின் கடன் உதவியின் கீழ் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை செயலாக்கப்பட்டது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

- அடையாளம் காணப்பட்ட 6,637 முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு நீர் வடிகட்டி உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மரத் தளபாட உபகரணங்களினை வழங்குதல்.
- 57,778 பிள்ளைகளுக்குக் கல்விக் கட்டண உதவியினை வழங்குதல்.
- அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களினூடாக இடம்பெற்ற பெற்றோர்களினை விழிப்புணர்வூட்டும் 4,045 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- அமைச்சின் தலைமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டக் கட்டமைப்பு மற்றும் வழிகாட்டுதல்களினைத் தயாரித்தல்.
- கற்றலினை மேம்படுத்துவதற்கு நேரடியான தலையீட்டினூடாக 181,305 மாணவர்களுக்கு பயன்களினை வழங்குதல்.
- சமூக ஆய்வினூடாக பயனாளிகளின் கருத்துக் கணிப்பு அறிக்கை உலக வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களிலுள்ள 109,597 சிறார்களுக்கு காலையுணவு வழங்குதல்.

# சமூக வலுவூட்டல் பிரிவு

## சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)

### முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

### 1. சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம்

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்கு இவ்வருட இறுதிக் காலாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா. 150 மில்லியன் ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்தி, தற்போதுள்ள 50 கிராமங்கள் மற்றும் 16 புதிய கிராமங்களின் 4,070 பயனாளிகளின் பொருளாதார தரத்தினை மேலோங்கச் செய்வதற்கு தொழில்நுட்ப உதவிகள், உபகரணங்கள், கட்டுமானம், மீன்பிடி மற்றும் கால்நடை வளரப்புக்குத் தேவையான உதவியினை வழங்குவதற்கு இப்பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், ரூபா. 102 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

**திறைசேரி ஒதுக்கீடுகளில்லாமல் அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

79 உற்பத்திக் கிராமங்களின் 3,456 பயனாளிகளுக்கு உதவி நிறுவனங்களின் பங்களிப்பினைப் பெற்று, அவர்களின் திறன் விருத்தி, விற்பனை மேம்பாடு மற்றும் உளப்பாங்கு விருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கும் மற்றும் சந்தை வாய்ப்புக்களினைத் தேடுவதற்குமென தேவையான தலையீடு இடம்பெற்றுள்ளது.

### 2. கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டம்

கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு கட்டங்களாக, 3,618 சமூகக் கட்டுப்பாட்டு மக்கள் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், அச்சங்கங்களின் பயனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நுண்நிதிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா. 1,641.68 நிதி, 1,551 செயலிலுள்ள சங்கங்களின் பயனாளிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இது வரை அச்சங்கங்களின் செயலிலுள்ள சங்கங்களினை மேலும் வலுவூட்டுவதற்கும், 2,067 செயலிழந்த சங்கங்களிடமிருந்த ரூபா. 635.70 மில்லியன் நிதியினை, செயலிலுள்ள சங்கங்களின் பயனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நுண்நிதிய நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கும், மீதி நிதியினை விளைத்திறனான வகையில் பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)

### முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

2023 ஆம் ஆண்டு தொடர்பிலான மூலதன ஒதுக்கீட்டின் கீழ் ரூபா. 34 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 34.23 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலதிகமாக செலவு செய்யப்பட்டிருந்த ரூபா. 0.23 மில்லியன் நிதி, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. மீண்டுவரும் ஒதுக்கீடுகள் ரூபா. 10,818.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 8,520.30 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

### 1. அங்கவீனமுற்ற நபர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு உதவிகளினை வழங்குதல்.

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- **உதவி உபகரணங்களினை வழங்குதல்** - ரூபா. 11.24 மில்லியன் செலவு செய்யப்பட்டு 13 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் நிதியுதவி 7, ஊன்றுகோல் 38, நடைப் பயிற்சி உதவி உபகரணங்கள் 24, சக்கர நாற்காலிகள் 65, செயற்கைக் கால்கள் 22, செவிப்புலக் கருவிகள் 8, மூக்குக்

கண்ணாடிகள் 7,425, தூர மற்றும் கிட்டப் பார்வை மூக்குக் கண்ணாடிகள் 64, கண் வில்லை 1, விசேட காலணிகள் 2, கொமட்டுடன்கூடிய சக்கர நாற்காலிகள் 14, கையூன்றுகோல்கள் 67 மற்றும் காற்று மெத்தை 1 வழங்கப்படுதல்.

- **மருத்துவ உதவியினை வழங்குதல்** - 542 அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 9.73 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- **கல்வி உதவியினை வழங்குதல்** - 461 அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு ரூபா. 5.37 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- **வீடமைப்பு உதவியினை வழங்குதல்** - சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்திலிருந்து 5% வீடமைப்பு நிதியத்திற்கு ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறுவதுடன், ரூபா. 22.98 மில்லியன் செலவு செய்யப்பட்டு அங்கவீனமுற்ற நபர்களுக்கு 241 வீடமைப்பு அலகுகளுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்படுதல்.

## 2. அங்கவீனமுற்ற நபர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிகளினை வழங்குதல்.

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- சுயதொழில் உதவிகளினை வழங்குதல் - 154 அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 5.12 மில்லியன் செலவு செய்தல்.
- திறன் விருத்தி - ரூபா. 0.22 மில்லியன் செலவு செய்து 5 அங்கவீனமுற்ற நபர்களுக்கு நிதியுதவிகளினை வழங்குதல்.
- பிரத்தியேக துறையின் தொழில்களுக்கு முன்வைத்தல் - 31 அங்கவீனமுற்ற நபர்கள் பிரத்தியேகத் துறையின் தொழில்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், 0.63 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதுடன், 10 நபர்களுக்கு சம்பளத்தில் 50% கொடுப்பனவு. அதன் கீழ் 6 அங்கவீனமுற்ற நபர்கள் Cargills நிறுவனத்திலும் மற்றும் 25 பேர் Pizza Hut நிறுவனத்திலும் தொழில்களுக்காக முன்வைக்கப்படுதல்.

## 3. அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாதாந்த வாழ்வாதார உதவியினை வழங்குதல்.

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

- அங்கவீனமுற்ற நபர்களுக்கென வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு தொடர்பில் ரூபா. 5,609.28 மில்லியன் செலவு செய்யப்பட்டு, 72,000 வழமையான பயனாளிகளுக்கு 17,882 மேலதிகக் கொடுப்பனவுகள் மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ள 16,139 பயனாளிகளுக்கு அக்கொடுப்பனவினை வழங்குதல்.
- சிறுநீரக நோயாளர்களுக்கென வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குவதற்கு ரூபா. 2,901.39 மில்லியன் செலவு செய்யப்பட்டு, 39,150 வழமையான பயனாளிகளுக்கு 18,159 மேலதிகக் கொடுப்பனவுகள் மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ள 1,924 பயனாளிகளுக்கு அக்கொடுப்பனவினை வழங்குதல்.

## 4. ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு அவசர உதவிச் செயற்திட்டம்

- அக்குரஸ்ஸ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்திற்கு ரூபா. 7.75 மில்லியன் செலவு செய்து மரத் தளபாடங்களினைக் கொள்வனவு செய்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் 10 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (300 பயனாளிகள்) தொடர்பில் ரூபா. 0.86 மில்லியன் செலவு செய்தல்.
- 08 அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் தமது சுய தொழிலினை மேம்படுத்துவதற்காக ரூபா. 0.4 மில்லியன் உதவியாக வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களினைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் தொடர்பில் அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களினை வலுவூட்டும் 4 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்கு ரூபா. 0.56 மில்லியன் செலவு செய்தல்.

## 5. பிற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- ரூபா. 9 மில்லியன் செலவு செய்யப்பட்டு விக்டோரியா இல்லத்தினை முன்னெடுப்பதற்காக ஊழியர்களின் சம்பளம், நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்கான கொடுப்பனவு.

- சர்வதேச அங்கவீனர் தினத்திற்கு நிகராக "அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் அவர்களுடன் மற்றும் அவர்களினால் நிலையான வளர்ச்சி இலக்குகளினை அடைவதற்கு செயலூக்கமான வகையில் ஒன்றிணைதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு விவாத நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அணுகக்கூடிய சுற்றுலாத் துறையினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமுலாக்குதல். இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 1.14 மில்லியன் பிரத்தியேகத் துறையின் உதவிகள் மற்றும் நன்கொடைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ரூபா. 0.47 மில்லியன் மட்டுமே திறைசேரி ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளன.

**திறைசேரி ஒதுக்கீடுகளின்றி அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**
- UN Habitat நிறுவனத்துடன் இணைந்து அங்கவீனம் தொடர்பிலான தேசிய செயற்திட்டத்தினைத் தயாரிக்கும் செயற்பாடுகள் இடம்பெறுதல்.
- அங்கவீனம் தொடர்பிலான இலங்கையின் தேசிய செயற்திட்டத்தினைத் திருத்தம் செய்தல்.

## முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)

## முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

2023 ஆம் ஆண்டு தொடர்பில் மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா. 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 2.90 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. மீண்டுவரும் ஒதுக்கீடுகளாக ரூபா. 143.78 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், (01./2023 மற்றும் 2023.01.27 ஆந் திகதிய செலவு முகாமைத்துவ சுற்றுநிரூபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மீண்டுவரும் ஒதுக்கீடுகளிலிருந்து 6% குறைக்கப்பட்டுள்ளது.) ரூபா. 137.97 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

முதியோர் கொடுப்பனவுகளினை வழங்குவதற்கு ரூபா. 24,430.69 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 22,533,57 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக ரூபா. 643.26 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

### 1. முதியோர்களுக்கு மாதாந்த வாழ்வாதார உதவியினை வழங்குதல்.

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**
- 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு முதியோர் கொடுப்பனவினை வழங்குதலின் கீழ் 416,667 வழமையான பயனாளிகளுக்கு ரூபா. 2,000/- என்றவாறும், 235,315 மேலதிகக் கொடுப்பனவுப் பயனாளிகளுக்கு ரூபா. 3,000/- என்றவாறும், காத்திருப்புப் பட்டியலிலுள்ள 109,583 பயனாளிகளுக்கு ரூபா. 5,000/- என்றவாறும் கொடுப்பனவுகளினைச் செய்வதற்கு ரூபா. 22,401.96 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- ரூபா. 28.02 மில்லியன் செலவு செய்யப்பட்டு 100 வயதிற்கு மேற்பட்ட முதியோர் கொடுப்பனவின் கீழ், 387 வழமையான பயனாளிகள் மற்றும் 177 மேலதிகமான கொடுப்பனவுப் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் இடம்பெறுதல்.

### 2. முதியோர்களுக்கு உதவிகளினை வழங்குதல்.

**முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**
- மருத்துவ உதவிகளினை வழங்குதல் - எவ்விதமான கொடுப்பனவொன்றுக்கும் உரித்தினைக் கொண்டிராத நாள்பட்ட தொற்றாத நோய்களினால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு ரூபா. 25,000 என்றவாறு வழங்கப்படும் "ஆரோக்யா" மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1,627 முதியோர்களுக்கு ரூபா. 41.18 மில்லியன் வழங்குதல்.
- செவிப்புலக் கருவிகளினை வழங்குதல் - ரூபா. 50.68 மில்லியன் செலவு செய்யப்பட்டு குறைந்த வருமானப் பயனாளிகளான 1,500 மூத்த பிரஜைகளுக்கு செவிப்புலக் கருவிகளினை வழங்குதல்.
- கண் வில்லைகளினை வழங்குதல் - ரூபா. 7.57 மில்லியன் செலவு செய்யப்பட்டு குறைந்த வருமானப் பயனாளிகளான 1,000 மூத்த பிரஜைகளுக்கு கண்வில்லைகளினை வழங்குதல்.

- மூக்குக் கண்ணாடிகளினை வழங்குதல் - குறைந்த வருமானப் பயனாளிகளான 2,054 மூத்த பிரஜைகளுக்கு மூக்குக் கண்ணாடிகளினை வழங்குவதற்கு ரூபா. 10.20 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- சுயதொழில் உதவிகளினை வழங்குதல் - முதியோர் ஒருவருக்கு ரூபா. 0.05 மில்லியன் என்றவாறு 525 முதியோர்களுக்கு உதவிகளினை வழங்குதல்.
- மருத்துவ வசதிகளினை வழங்குதல் - சுகாதார முகாம்களினை நடாத்துவதனூடாக ரூபா. 4.22 மில்லியன் செலவு செய்யப்பட்டு 2,886 முதியோர்களுக்கு வசதிகளினை வழங்குதல்.

## 3. முதியோர்களுக்கு அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல்.

**முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- முதியோர்கள் தங்களின் வீடுகளில் வாழ்வதற்குத் தேவையான குறைந்தபட்ச வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளினை வழங்குவதற்கு பயனாளி ஒருவருக்கு ரூபா. 0.1 மில்லியனினை வழங்கும் “இலகுவான” நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2,252 முதியோர்களுக்கு ரூபா. 119,83 மில்லியனினை வழங்குதல்.
- “திரிய பியச” குறைந்த வருமானப் பயனாளிகளான மூத்த பிரஜைகளுக்கு 49 வீடுகளினை நிர்மாணித்தல்/பழுதுபார்ப்பதற்கு வீடொன்றுக்கு ரூபா. 0.7 மில்லியினை வழங்குவதற்கு ரூபா. 34.95 மில்லியன் வழங்கப்படுதல்.

## 4. முதியோர் குழுக்களினை வலுவூட்டுதல்.

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

- கிராமிய மட்டத்தின் முதியோர் குழுக்களினை வலுவூட்டுவதற்கு கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், ரூபா. 0.39 மில்லியன் செலவு செய்யப்படுதல்.

**முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- முதியோர் மட்டத்தின் 625 முதியோர் குழுக்களினை வலுவூட்டுவதற்கு ரூபா. 62.42 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- ரூபா. 0.45 மில்லியன் செலவு செய்யப்பட்டு தேசிய மட்டத்தில் முதியோர் அமைப்பொன்றினை நிறுவுவதற்கு 2 கலந்துரையாடல்கள் நடாத்தப்படுதல்.

## 5. முதியோர் இல்லங்கள் மற்றும் பகல்நேர நிலையங்களினை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- ரூப. 1.79 மில்லியன் செலவு செய்யப்பட்டு மாலிகாதன்ன முதியோர் இல்லங்களினைப் பராமரித்தல், பழுதுபார்த்தல்.

**முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- பன்னல “WelcomeVillage” முதியோர் இல்லத்தின் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பில் ரூபா. 24.11 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- தெகிஅத்தகண்டிய சரண முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு ரூபா. 0.24 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- கதிர்காமம் முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு ரூபா. 1.08 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- கதிர்காமம் முதியோர் இல்லத்தினை நிர்மாணிக்கும் செயற்பாடுகளுக்கு ரூபா. 92.94 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதுடன், 51% பௌதிக முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது.
- ரூபா. 80.25 மில்லியன் செலவு செய்யப்பட்டு 41 முதியோர் பகல்நேர நிலையங்களினை நிர்மாணித்தல்.
- 22 முதியோர் இல்லங்களினை நிர்மாணித்தல், புதுப்பித்தல் மற்றும் உபகரணங்களினை பெற்றுக் கொள்ளுவதற்கு ரூபா. 33.50 மில்லியன் வழங்கப்படுதல்.
- 15 முதியோர் பகல்நேர நிலையங்களுக்கு உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா. 8.08 மில்லியன் செலவு செய்யப்படுதல்.

**6 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- ஓய்வு வாழ்வு தொடர்பில் பள்ளி மாணவர்கள் மற்றும் ஓய்வு பெறுவதற்குள்ள நபர்களினை விழிப்புணர்வூட்டும் 37 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்காக ரூபா. 2.64 மில்லியன் செலவு செய்யப்படுதல்.

**முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- சகல மாவட்டங்களினையும் உள்ளடக்கும் வகையில் முதியோர் இல்லங்களில் கடமைபுரியும் காப்பாளர்களினை பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 224 காப்பாளர்களினை பயிற்றுவிப்பதற்கு ரூபா. 2.34 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- முதியோர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களில் டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் முதியோர்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்கு 45 யோகா ஊக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்கு ரூபா. 6.29 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- முதியோர்களுக்கு யோகப் பயிற்சிகள் மற்றும் எளிய பயிற்சிகள் தொடர்பில் பயிலுனர்களினைப் பயிற்றுவிக்கும் 2 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்கு ரூபா. 2.90 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- கிராமிய முதியோர் குழுக்களின் பொருளாளர்களுக்கு 161 திறன் விருத்தி வேலையரங்குகளினை நடாத்துவதற்கு ரூபா. 4.61 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- ரூபா. 0.07 மில்லியன் செலவு செய்து முதுமை தொடர்பில் இளைஞர் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதனூடாக 50 நபர்கள் பயிற்சியளிக்கப்படுதல்.

**7. பிற நிகழ்ச்சித் திட்டங்கள்**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- ரூபா. 0.91 மில்லியன் செலவு செய்யப்பட்டு 64,024 முதியோர் அடையாள அட்டைகளினை விநியோகித்தல்.
- முதியோர் பராமரிப்புச் சபையின் 145 முறைப்பாடுகளினைத் தீர்ப்பதற்கு ரூபா. 1.72 மில்லியன் செலவு செய்யப்படுதல்.
- ரூபா. 0.24 மில்லியன் செலவு செய்யப்பட்டு 7 வெளிக்கள சோதனைகள் முன்னெடுக்கப்படுதல்.
- முதியோர்களுக்காக செயலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டுவதற்கு 7 தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- ரூபா. 2.25 மில்லியன் செலவு செய்யப்பட்டு 11 முதியோர் சபைக் கூட்டங்கள், 4 முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் கூட்டங்கள், 6 முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுதல்.
- ஆண்டு அறிக்கையினை அச்சடித்தல் மற்றும் மொழிபெயர்ப்புச் செய்வதற்கு ரூபா. 0.14 மில்லியன் செலவு செய்யப்படுதல்.

**முதியோர் பாதுகாப்பு நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- முதியோர்களின் மத சுற்றுலாக்களுக்கு நிதி வசதிகளினை வழங்குதலின் கீழ் சுற்றுலாவொன்றுக்கு ரூபா. 0.075 மில்லியனினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 360 சுற்றுலாக்களுக்கு ரூபா. 27.02 மில்லியன் வழங்கப்படுதல்.
- ரூபா. 1.13 மில்லியன் செலவு செய்யப்பட்டு 60 மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல்.
- பொருளாதாரத்தினைப் பெருக்குவதற்கான 03 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்காக ரூபா. 0.60 மில்லியன் செலவு செய்யப்படுதல்.

## இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

### முன்னேற்றம் மற்றும் எதிர்காலச் சாதனைகள்

2023 ஆம் ஆண்டு தொடர்பில் மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா. 5.30 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் ரூபா. 1..25 மில்லியன் வருடத்தில் செலவு செய்யப்பட்டு மீதம் ரூபா. 4.05 மில்லியனாகும். மீண்டுவரும் ஒதுக்கீடுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ரூபா. 150 மில்லியன் நிதியில், 01/2023 என்ற இலக்க மற்றும் 2023.01.27 ஆந் திகதிய செலவு முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், ரூபா. 4.2 மில்லியன் மீதமாகியுள்ளதுடன், ரூபா. 145.8 மில்லியன் மீண்டுவரும் செலவுகளாக விடுவிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து ரூபா. 135.6 மில்லியன் வருடத்தில் செலவு செய்யப்பட்டுள்ளதுடன், மீதி பொறுப்பிலுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

**4. ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன் முன்மொழிவுத் திட்டங்களுக்கு உறுப்பினர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயன்களினை வழங்குதல்.**

- ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன் முன்மொழிவுகள் திட்டத்திற்கு 66,448 உறுப்பினர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், அதன் முதலாவது தவணைப் பணமாக ரூபா. 145,25 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளது.
- 35,191 உறுப்பினர்களுக்கு மாதாந்த ஓய்வூதியத்தினை வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன், அது தொடர்பில் வருடத்தில் ரூபா. 407.00 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
- 48 உறுப்பினர்களுக்கு ரூபா. 2.40 மில்லியன் மரணப் பணிக்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.
- பகுதியளவிலான அங்கவீனர் பணிக்கொடை மற்றும் முழுமையான அங்கவீனர் மாதாந்தக் கொடுப்பனவுகளாக ரூபா. 0.65 மில்லியன் கொடுப்பனவு முன்னெடுக்கப்பட்டுள்ளது.
- 581 உறுப்பினர்களுக்கு மேலதிகப் பயன்களாக (5 ஆந் தரப் புலமைப்பரிசில், க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) ரூபா. 7.43 மில்லியன் கொடுப்பனவு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**2. ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு முன்மொழிவுத் திட்டங்களினை ஊக்குவித்தல்.**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

- சமூகப் பாதுகாப்பு தொடர்பான அறிவைப் பிரபலப்படுத்துவதற்கு, அது தொடர்பிலான விடயங்களினை பள்ளிப் பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு தேசியக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய பாடசாலைப் பாடத் திட்டத்தினுள் சமூகப் பாதுகாப்பு தொடர்பிலான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 9 வது தரம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட "குடியுரிமைக் கல்வி பாடத்திட்ட கட்டமைப்பில்" "சட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு பாராளுமன்றச் சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்" என்பதன் கீழ் சமூகப் பாதுகாப்பு அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளது.
- சமூகப் பாதுகாப்பு தொடர்பிலான அறிவு, தேவையினை விளம்பரப்படுத்துதல், வள முகாமைத்துவம், தொழில்முனைவோர், சார்பு மனப்பான்மையிலிருந்து விடுபடுதல், முறையான தொழில் கண்ணியம் வழங்குதல் போன்ற நிலைகள் தொடர்பில் பாடசாலை மாணவ சமுதாயம் மற்றும் பெற்றோர்களினை விழிப்புணர்வூட்டுவதற்கு 124 நாடளாவிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**ஓய்வூதிய நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- 1,032 செயலற்ற உறுப்பினர்களினை மீளவும் செயலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 7.64 மில்லியன் நிலுவைத் தவணை மீளவும் அறவீடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் ரூபா. 0.271 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல 26,469 உறுப்பினர்களினை செயலூக்கமாக முன்னெடுப்பதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன,
- பல்வேறு துறைகளில் வேலைகள் மற்றும் தொழில்களில் ஈடுபடுபவர்களை அவர்களின் வேலைகளில் ஈடுபடுமாறு ஊக்குவித்தல் மற்றும் அவர்களுக்கு சரியான சமூகப் பாதுகாப்பினை வழங்குவதற்கு விசேட சலுகைகளுடன்கூடிய ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணை திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் கடல்சார் துறைக்கான "மாலுமிகள்" சமூகப் பாதுகாப்பு

முன்மொழிவுத் திட்டம், வெளிநாட்டில் பணியாற்றுபவர்களுக்கு "மனுசவி" ஓய்வூதியப் பிரேரணை திட்டம் மற்றும் கலைத்துறை தொடர்பில் "கலைஞர்கள்" ஓய்வூதியப் பிரேரணை திட்டம் போன்ற பிரேரணை திட்டங்கள் மூலம் 681 நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சான்றிதழ்கள் வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

- சமூகப் பாதுகாப்புச் சபை மற்றும் சபையினால் அறிமுகஞ்செய்யப்பட்டுள்ள ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணை திட்டங்களினை ஊக்குவித்தல், சமூக ஊடக விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்களினை ஒலி, ஒளி பரப்புதல், செய்தித்தாள் கட்டுரைகள் மற்றும் செய்தித்தாள் அறிவித்தல்களினை வெளியிடுதல் இடம்பெற்றுள்ளதுடன், அது தொடர்பில் ரூபா. 1.586 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

**3. சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களினை அவர்களின் உரிய தொழில்வாண்மைகளில் ஈடுபடுமாறு வலுவூட்டுடல், சிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் பயன்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல்.**

**ஓய்வூதிய நிதியத்தினூடாக செயலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

சுயதொழில்களில் ஈடுபடும் நபர்களினை வலுவூட்டுதல், சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் சமூகப் பாதுகாப்பு பிரேரணைகள் திட்டங்களினை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவர்களிடம் சிக்கனமாக இருத்தல் மற்றும் வள முகாமைத்துவம் தொடர்பிலான 4,148 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதுதொடர்பில் ரூபா. 1.279 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

### முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

2023 ஆம் ஆண்டு தொடர்பில் மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா. 5.30 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், செலவு ரூபா. 3.64 மில்லியனாகும். மீண்டுவரும் ஒதுக்கீடுகளாக ரூபா. 130.31 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் (01/2023 என்ற இலக்க மற்றும் 2023.01.27 ஆந் திகதிய செலவு முகாமைத்துவச் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மீண்டுவரும் ஒதுக்கீடுகளிலிருந்து 6% குறைக்கப்பட்டுள்ளது/). ரூபா. 115.68 மில்லியன் மீண்டுவரும் செலவுகளாக விடுவிக்கப்பட்டுள்ளது. செலவு ரூபா. 114.02 மில்லியனாகும்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு சீதுவ பிரதேசத்தில் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல் மற்றும் தளபாடங்களினைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா. 230 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 75.76 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

**1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு சீதுவப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டிடத் தொகுதி**

A மற்றும் B ஆகிய இரு பகுதிகளினைக் கொண்ட இக்கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2017.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இக்கட்டிடம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 1,000 மில்லியனாவதுடன், 2017.01.01 தொடக்கம் 2023.09.30 ஆந் திகதி வரை ரூபா. 830.45 மில்லியன் நிதிசார் முன்னேற்றமொன்று எட்டப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 190 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 35.89 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. 2017.01.01 ஆந் திகதி தொடக்கம் 2023.12.31 ஆந் திகதி வரையில் ரூபா. 866.34 மில்லியன் நிதிசார் முன்னேற்றமொன்று எட்டப்பட்டுள்ளதுடன், கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளில் 98.16 % நிறைவடைந்துள்ளது.

**2. பட்டம் மற்றும் டிப்ளோமாப் பாடநெறிகள்**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- சமூகப் பணியில் இளங்கலைப் பட்டப் பாடநெறி தொடர்பில், 714 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். (செலவு ரூபா. 4.02 மில்லியன்)

- சமூகப் பணியில் இளங்கலைப் பட்டப் பாடநெறியினைத் தொடரும் 258 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல் (செலவு - ரூபா. 4.48 மில்லியன்)
- சமூகப் பணியில் இளங்கலைப் பட்டப் பாடநெறியின் (2017/2018) பட்டமளிப்பு விழாவினை நடாத்துதல்.
- உளவளத்துணையில் இளங்கலைப் பட்டப் பாடநெறியின் விடயப் பரிந்துரைக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான திருத்த முன்மொழிவினை மீளவும் முன்வைப்பதற்கு உரிய செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.
- மொழி மற்றும் கலாசார ஆய்வுப் பள்ளியினை நிறுவுவதற்கு நிகராக இளைஞர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி தொடர்பிலான பாடத்திட்ட மேம்பாட்டுச் செயற்பாடுகள் நிறைவடைதல். (செலவு ரூபா. 0.21 மில்லியன்)

**நிதி அறவீடு செய்யப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- 2019/2020 கல்வி ஆண்டின் (ஆங்கில மொழி) சமூகப் பணியில் முதுகலைப் பாடநெறி தொடர்பில் கலந்துகொண்ட 08 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவினை நடாத்துதல் மற்றும் 2020/2021 கல்வி ஆண்டு மற்றும் 2021/2022 கல்வி ஆண்டுக்கான 140 மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளினை முன்னெடுத்தல். இப்பாடநெறியினை முன்னெடுப்பதற்காக ரூபா. 15.35 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா. 11.30 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
- 3 கல்வி ஆண்டுகளுக்கான (2021/2022, 2022/2023, 2023/2024) உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறியினை நடாத்துதல் தொடர்பில் 623 மாணவர்கள் கலந்துகொண்டமை, இது தொடர்பில் அறவீடு செய்யப்பட்டுள்ள மொத்த வருமானம் ரூபா. 12.21 மில்லியனாவதுடன் மொத்தச் செலவு ரூபா. 9.18 மில்லியனாகும்.
- 21 மாணவர்களுக்கு 18 மாத உளவளத்துணை தொடர்பிலான உயர் டிப்ளோமாப் பாடநெறியினை நடாத்துவதற்காக 2023 ஆம் ஆண்டுக்கு ரூபா. 0.03 மில்லியன் வருவாயொன்று கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் ரூபா. 0.86 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
- சமூகப் பணி/உளவளத்துணை/குழந்தைகளினை மையமாகக் கொண்ட சமுதாய மேம்பாடு தொடர்பில் சான்றிதழ் வழங்கும் பாடநெறிக்கு 500 மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர் என்பதுடன், பெறுபேற்றினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- பிற திணைக்களங்களின் கோரிக்கைகளின் கீழ் அமுலாக்கப்படும் குறுகிய காலப் பயிற்சிப் பாடநெறிகளின் கீழ் 20 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. (செலவு ரூபா. 0.10 மில்லியன்)
- முகவர் துறை மற்றும் பீட மேற்பார்வையாளர்கள் 130 பேருக்கு பயிற்சியளித்தல் (செலவு - ரூபா. 0.01 மில்லியன்)
- பணியாட்தொகுதி உத்தியோகத்தர்கள் 5 பேருக்கு கற்பித்தல் தொடர்பிலான பாடநெறியொன்றினை நடாத்துதல். (செலவு - ரூபா. 0.25 மில்லியன்)
- அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கை அமுலாக்கத்தின் கீழ் பணியாட்தொகுதி உத்தியோகத்தர்களினைப் பயிற்றுவித்தல் (செலவு - ரூபா. 0.15 மில்லியன்)

## 4. ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளினை வெளியிடுதல்.

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- சமூகப் பணி தொடர்பிலான இதழ், சமூக அபிவிருத்தி தொடர்பிலான இதழ், செய்திக் கதிர் உள்ளிட்ட 09 வெளியீடுகளினை ஒன்லைனில் வெளியீடு செய்தல். (செலவு ரூபா. 0.11 மில்லியன்)
- 9 நூல்களினை வெளியீடு செய்தல் மற்றும் அறிவுபூர்வமான சொற்பொழிவினை நடாத்துதல்.
- சமூக அபிவிருத்தி தொடர்பிலான இளங்கலைப் பட்ட பாடத்திட்ட மேம்பாட்டுத் தேவை தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (60%)
- ஒருங்கிணைந்த சமூகப் பணிச் செயற்பாடுகளினூடாக பன்முகத்தன்மைக்குக் கீழ்ப்பணிதல் தொடர்பில் சமூகப் பணியில் சர்வதேச மகாநாட்டினை நடாத்துதல்.
- சமூகக் கொள்கைகள் தொடர்பிலான அறிக்கை III இன் வெளியீடு.

## கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

### முன்னேற்றம் மற்றும் எதிர்கால சாதனைகள்

2023 ஆம் ஆண்டு தொடர்பில் மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா. 50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 38.45 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. பொரளை மற்றும் பிலிமத்தலாவ நிலையங்களிலுள்ள விடுதிகள் மற்றும் விரிவுரை மண்டபங்களினை வெளி நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் ரூபா. 4.04 மில்லியன் வருமானமொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

#### 1. ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் கற்கை ஆய்வுகள்

**திறைசேர் ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- சமுதாயத்தின் உணவு உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் திருப்தியினை அதிகரிப்பதற்கு தெருவோர வியாபாரிகள் தொடர்பிலான செயற்பாட்டு ஆய்வொன்றினை நடாத்துதல். (பண்டாரவளை, பானந்துறை, கிக்கடுவ, யாழ்ப்பாணம், கடுகன்னாவ போன்ற உள்ளூராட்சிப் பகுதிகளினை உள்ளடக்கும் வகையில்)
- சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்படும் நிறுவன மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பயனாளி குடும்பங்களின் பொருளாதார நிலையில் ஏற்படும் தாக்கம் குறித்து கணக்கெடுப்பு நடாத்துதல். கண்டி, கொழும்பு, களுத்துறை மற்றும் குருனாகல் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளினை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது.
- சௌபாக்யா கிராமங்களின் தற்போதைய நிலவரம் குறித்த ஆய்வு நிறைவு பெற்றுள்ளதுடன், அது தொடர்பிலான 20 அறிக்கைகளினை அமைச்சுக்கு வழங்குதல்.
- கண்டி மாவட்டத்தின் சமுர்த்தி வங்கி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நடாத்தப்பட்ட பெண்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு நுண் நிதிய நிறுவனங்களின் பங்கு தொடர்பில் கள ஆய்வு அறிக்கைகளினைத் தயாரித்தல்.

(மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா. 0.23 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.)

**திறைசேரி ஒதுக்கீடுகளின்றி அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

- இலங்கையில் பிச்சைக்காரர்கள் தொடர்பிலான கணக்கெடுப்புக்கு கொழும்பு மாவட்டத்தின் தரவுகளினைச் சேகரித்தல்.

#### 2. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினை மத்தியஸ்தர்களாக கட்டியெழுப்புவதற்கான பயிற்சிகள் மற்றும் மத்தியஸ்தர்களுக்கான 11 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் நிறுவன மேம்பாட்டு பயிற்சி தலையீடுகள் மற்றும் வீட்டு முகாமைத்துவம் தொடர்பிலான ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் 2 நடாத்தப்படுதல்.
- நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 12 நடாத்தப்படுதல்.

(மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா. 0.09 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.)

**திறைசேரி ஒதுக்கீடுகளின்றி அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- கித்துல் விவசாயிகளினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - மாத்தளை மாவட்டத்தின் ரத்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் ஒருநாள் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல் - பங்கேற்பு 56
- சௌபாக்யா விளைத்திறனான கிராமங்களின் எதிர்வரும் திட்டங்களினைத் தயாரிப்பதற்காக கண்டி மாவட்டத்தின் தொளுவ பிரதேச செயலகப் பிரவில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல் - பங்கேற்பு 30
- கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உத்தியோகத்தர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தங்கல்ல மாவட்டத்தின் றுவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல் - பங்கேற்பு 38
- ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சி வேலையரங்கொன்றினை நடாத்துதல் - 57 மாணவர்கள்

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஒருங்கிகணைந்த மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டம் குறித்த வேலையரங்கொன்றினை நடாத்துதல் - 61 உத்தியோகத்தர்கள்.
- களனிப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு பங்கேற்பு மேம்பாட்டுத் திட்டம் குறித்து பயிற்சி வேலைத்திட்டமொன்றினை நடாத்துதல் - 45 மாணவர்கள்.
- சணச மாணவர்களுக்கு பங்கேற்பு மேம்பாட்டுத் திட்டம் குறித்து பயிற்சி வேலைத்திட்டமொன்றினை நடாத்துதல் - 51 மாணவர்கள்

**3. வெளியீடுகள்**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- பிரஜாசக்தி இலத்திரனியல் சஞ்சிகையின் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் இணையத் தளத்தில் வெளியீடு.
- நிறுவனத்தின் அபிவிருத்திச் செய்திகளினை இலத்திரனியல் ஊடங்களுக்கு விநியோகித்தல்.
- நூலகத்தினை மேம்படுத்துதலின் கீழ் (SCAN) செய்யப்பட்ட 04 கட்டுரைகள் மற்றும் 1 அறிக்கையினை இணையத்தில் வெளியீடு செய்தல்.
- நிறுவனத்தின் வசதிகள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட 03 சிற்றேடுகளினை இணையத்தில் வெளியீடு செய்தல்.

**4. அமுலாக்கப்பட்டுள்ள பிற நிகழ்ச்சித் திட்டங்கள்.**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- நிறுவனத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் தொடர்பிலான 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல்.

## உளவளத்துணைப் பிரிவு

### முன்னேற்றம் மற்றும் எதிர்காலச் சாதனைகள்

2023 ஆம் ஆண்டு தொடர்பில் மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா. 10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 0.72 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று எட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

**1. சமுதாயத்திற்காக முன்னெடுக்கப்படும் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள்.**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் உள ஆரோக்கியத்தினை மேம்படுத்தும் 23 நிகழ்ச்சித் திட்டங்கள் 23 மாவட்டங்களினுள் அமுலாக்கப்படுதல்.
- பெண் குழந்தைகள் மற்றும் பெண்களினை வலுவூட்டுவதற்காக 802 உளவியல் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், 41,210 பயனாளிகள் இது தொடர்பில் கலந்து கொண்டனர்.
- மனநலக் கோளாறுகள் மற்றும் சிக்கல் நிலைமையுடன் வருகைதரும் வாடிக்கையாளர்களுக்கு 21,681 பிரத்தியேக உளவளத்துணை சேவை அமர்வுகளினை நடாத்துதல்.
- உள நோய்கள், உளச் சிக்கல் நிலைமைகள் மற்றும் பல்வேறு உளவியல் சமூகப் பிரச்சினைகளினைக் குறைப்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் 343,416 பயனாளிகளுக்கு 8,225 குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- கையடக்கத் தொலைபேசி மூலமான உளவளத்துணை சேவையூடாக வாடிக்கையாளர்களின் 3,869 தொலைபேசி அழைப்புகளுக்கு சேவையினை வழங்குதல்.

**பிற நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.**

- இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு (மேற்பார்வை நிலை) 24 உள நல மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.

- கந்தக்காடு, சேனாபுர, வவுனியா நிலைங்களில் ஆபத்தான போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் வழிதவறிய போராளிகளின் மறுவாழ்வுக்கான 358 குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் (பயனாளிகள் 1,874), 07 யோகா நிகழ்ச்சித் திட்டங்கள் (பயனாளிகள் 427). 01 இசை பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டம் (பயனாளிகள் 200) நடாத்தப்படுதல்.
- உளவளத்துணை சேவைகளின் தேவையினைக் கொண்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உளவளத்துணை உத்தியோகத்தர்களின் சேவையினை வழங்குதல். (மருத்துவமனைகள், சிறைச்சாலைகள், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள் மற்றும் விமான சேவை நிறுவனங்கள்)

**2. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

**பிற நிதியங்களினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஆசிய அறக்கட்டளையினூடாக பெறப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு 4 திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

**3. பிற நிகழ்ச்சித் திட்டங்கள்**

**திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்**

- புதிய மென்பொருள் மற்றும் உபகரணங்களினைப் பயன்படுத்தி உளவியல் உளவளத்துணை சேவையினை ஒருங்கிணைத்தல், மேம்பாடு தொடர்பில் 3,200 படிவங்களினை அச்சடித்தல், ஆசிய அறக்கட்டளையினால் அந்நிறுவனத்தின் ஒதுக்கீடுகளினைச் செலவு செய்து 212,500 வாடிக்கையாளர் தரவுத் தாள்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன.
- உளவளத்துணைப் பிரிவின் இணையத் தளத்தினை முன்னெடுத்துச் செல்லுதல்.
- இணைய வசதிகளினை முன்னெடுத்துச் செல்லுதல்.
- சர்வதேச மனநல வாரத்துடன் இணைந்து அமைச்சு மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல், மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவுகள் மட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் 23 சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

## 2.3 சவால்கள்

## மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

- பெண்களின் கூட்டமைப்பு முயற்சிகளுக்கு ஆதரவு வழங்காத பாரம்பரிய சமூக கட்டமைப்புகளின் எதிர்ப்பு.
- தொலைதூர அல்லது ஒதுக்கப்பட்ட சமூகங்களில் பெண்களைச் சென்றடைவதில் சிரமம்
- இன சிறுபான்மையினர், கிராமப்புறங்கள் மற்றும் அங்கவீனர் உட்பட பல்வேறு பெண் குழுக்களை வலையமைப்பில் சேர்த்தல் மற்றும் பிரதிநிதித்துவம் செய்வதை உறுதி செய்தல்.
- பொருளாதாரம் மற்றும் சமூக வலுவூட்டல் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களினை இனங்காணுதல், திட்டமிடுதல், அமுலாக்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- விரிவான வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை திட்டமிடுதல், அமுலாக்குவதற்கு நிதி மற்றும் வளங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.
- கிராமப்புறப் பெண்கள், தனித் தாய்மார்கள் மற்றும் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் போன்ற பல்வேறு பெண் குழுக்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதில் சிரமம்.
- குறுகிய கால தலையீடுகளுக்கு அப்பால் நிகழ்ச்சித் திட்டங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்தல்.
- தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வில் வரையறுக்கப்பட்ட திறன் மற்றும் நிபுணத்துவம் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கத்தினை பயனுள்ளதாக கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- ஆழமான வேரூன்றிய பாலின விதிமுறைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறையை நிலைநாட்டும் கலாச்சார நடைமுறைகள்.
- குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடு போன்ற சமூக கஷ்டங்களை எதிர்கொள்ளும் பெண்களுக்கு சட்டம்சார் உதவி மற்றும் உதவிச் சேவைகளுக்கான அணுகல் இல்லாமை.

- ஆணாதிக்க மனோபாவங்களை எதிர்கொள்ளுதல் மற்றும் பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதற்குமான முன்முயற்சிகளுக்கு சமூகத்தின் பழமைவாத பிரிவுகளின் எதிர்ப்பு.
- சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் உட்பட முக்கிய பங்குதாரர்களிடையே பெண்களின் உரிமைகள் பற்றிய வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வு மற்றும் புரிந்துணர்வு..
- சமூகத்தின் விசேட காரணங்களின் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்கும் பெண்களுக்கு விசேட நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- அடையாளம் காணப்பட்ட தேவைகளினை அமுலாக்குவதற்கு நிலவும் ஒதுக்கீட்டு வரையறைகள், கட்டுநிதியினைப் பெறுவதில் தாமதம் மற்றும் வரையறைகள்..
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெளிக்கள மற்றும் அலுவலகப் பணிச் செயற்பாடுகளினைக் கண்காணிப்பதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு போதிய ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாமையின் காரணமாக உத்தியோகத்தர்களின் வெளிக்களச் பணிச் செயற்பாடுகள் தொடர்பில் சரியான கண்காணிப்பொன்று இடம்பெறாமை மற்றும் வவுச்சர்கள், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மற்றும் நிறுவனத்திற்கு உரித்தான பிற வெளியீடுகளினை வெளிக்களத்திற்கு முன்வைப்பதற்கு இயலாமை.
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்தில் அமுலாக்கப்படும் பிரதான மீண்டுவரும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலாக அமுலாக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வேறான செலவு விடயமொன்று இல்லாமையின் காரணமாக பிற நிதி நிறுவனங்களிலிருந்து ஒதுக்கீட்டு நிதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நேரிடுதல், 2021 ஆம் ஆண்டுக்கு முன்னர் அது தொடர்பிலான செலவு விடயமொன்று இருந்துள்ளது. (உதாரணம், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல், தேசிய வாரத்தினை அமுலாக்குதல் மற்றும் தேசியக் குழுவினை செயலாக்குதல்).
- பிரதேச செயலகப் பிரிவுகளினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் தரவுத் திட்டங்களினை முன்னெடுத்துச் செல்லுதல், அவற்றினை நாளதுவரைப்படுத்துதல், அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் பிற அறிக்கைகளினை தயாரிப்பதற்குத் தேவையான கணனி வசதிகள் மற்றும் இணைய வசதிகள் போதாமை மற்றும் சில அலுவலகங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அலகுக்கு ஒரே ஒரு கணினி இருப்பதன் காரணமாக உரிய திகதியில் முன்னேற்றம் மற்றும் தரவை வழங்குவது கடினமான சவாலாக உள்ளது.
- Lanka Women e- Market தொடர்பில் பெண் தொழில்முனைவோர்களுக்கு அதனூடாக சரியான பெறுபேறுகளினைப் பெறுவதற்கு தகவல் தொழில்நுட்ப அறிவினை நடைமுறையில் பயன்படுத்துவதில் சிக்கல் காணப்படுதல்.
- முகாமைத்துவ தகவல் தரவு அமைப்புகளைப் பயன்படுத்துவதைப் போலவே, AI தொழில்நுட்பத்தின் பயன்பாடும் குறைந்தபட்சமாகவே உள்ளது.
- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு கிடைக்கப் பெற்ற நிதி ஒதுக்கீடுகள் போதாமை.
- தேவையான தொழில்நுட்ப விடய அறிவு, திறன்கள் மற்றும் திறன்களைக் கொண்ட அதிகாரிகளின் பற்றாக்குறை மற்றும் தற்போதுள்ள அதிகாரிகளிடம் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்கு போதுமான ஏற்பாடுகள் இல்லாமை.

## சமூக வலுவூட்டல் பிரிவு

- சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்கியவேளையில் மூலப்பொருட்களின் விலை உயர்வு, சந்தைப் பிரச்சினைகள், ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் வரையறுக்கப்படுதல், நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள் இல்லாதுள்ளனர் என்பதுடன், சமூக சேவைகள் உத்தியோகத்தர்களினூடாக கடமைகளினை நிறைவேற்றுவதற்குச் செல்லும்போது நேரடியாக கட்டளையிடுவதில் சிக்கல் நிலை காணப்படுகிறது
- அமைச்சுக்கான சகல உத்தியோகத்தர்களுக்கும் இணையம் மற்றும் கணனி வசதிகள் குறைக்கப்படுவதால் பிரதேச மட்டத்தில் தரவுகளினைப் பெற்றுக் கொள்ளுவதில் தாமதம் ஏற்படுதல்..
- அமைச்சின் சில நிறுவனங்களில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை.

- மூத்த பிரஜைகளின் சனத்தொகை வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது முதியோர் கொடுப்பனவினை வழங்குவதற்கு திறைசேரியினால் ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாமை.
- முதியோர்களினை விடுதியில் வைத்திருப்பதன் போக்கு அதிகரித்தமையின் காரணமாக அதற்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதில் சிரமம்.
- சில பிரதேச செயலகங்களில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அதிகமாகவுள்ளதால் விடயத்தினை உள்ளடக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட கள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை,
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு சீதுவ பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டிடத் தொகுதியின் கட்டுமானம் நிறைவு பெறாமையின் காரணமாக அதிகளவிலான மாணவர்களுக்கு பாடநெறிகளினை முன்னெடுப்பதில் இட வசதிகள் வரையறுக்கப்படுதல்.
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியாட்தொகுதியின் வெற்றிடங்களினை நிரப்புவதில் இட வரம்புகள் காரணமாக கல்வி மற்றும் கல்வி சாராப் பிரிவுக்கான கடமைகளினை விளைத்திறனாக்குவதில் சிக்கல்கள் எழுதல்.
- பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலக்கிடப்பட்ட வாடிக்கையாளர்களின் வருமானத்தில் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டாதால் ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டங்களுக்கு உறுப்பினர்களினைச் சேர்த்தல் மற்றும் தவணைகள் சேகரிப்பு கடினமானதாக இருத்தல்.
- ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்தின் மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்குப் போதுமானவாறு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாமை மற்றும் அரச சுற்றுநிரூபங்களினூடாக செலவு வரையறைகளினை விதித்தல்.
- பங்களிப்பாளர்களின் தவணைப் பணம் ஒப்பீட்டளவில் அதிக தொகையாகக் காணப்படுவதன் காரணமாக சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள குறைந்த வருமானப் பயனாளிகள் அது தொடர்பில் அரச நிதிப் பங்களிப்பினை எதிர்பார்த்தல்.

## 2.4 எதிர்கால இலக்குகள்

### மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

- பல்வேறு வயதினரைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களைப் புரிந்து கொள்ளுவதற்கு விரிவான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை நடாத்துதல்.
- பதின்வயதினர், பணிபுரியும் தொழில்வாண்மையாளர்கள் மற்றும் வயோதிபப் பெண்கள் உட்பட பல்வேறு வாழ்க்கைப் பருவங்களிலுள்ள பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு இலக்கு திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை மேம்படுத்துதல்.
- பயனுள்ள நிகழ்ச்சித் திட்டங்களினை திட்டமிடுதல் தொடர்பில் தரவுகள் மற்றும் நுண்ணறிவுகளினை சேகரிப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் போன்ற தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.
- பாலினம், பாகுபாடு மற்றும் சமத்துவமின்மையை நிலைநிறுத்தும் சமூக விதிமுறைகள் மற்றும் உளப்பாங்குகளினை எதிர்கொள்ளுவதற்கு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் பட்டறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல்.
- குடும்ப வன்முறை, துன்புறுத்தல் மற்றும் பணியிடத்தில் பாகுபாடு காட்டுதல் போன்ற சமூக கஷ்டங்களை அனுபவிக்கும் பெண்களுக்கு ஆலோசனை மற்றும் சட்ட உதவி உள்ளிட்ட ஆதரவுச் சேவைகளை வழங்குதல்.
- பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் பெண்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களுடன் கூட்டாண்மையினை ஏற்படுத்திக் கொள்ளுதல்..
- தனித் தாய்மார்கள், விதவைகள், அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பெண்களின் ஒதுக்கப்பட்ட குழுக்களை இலக்காகக் கொண்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல்.
- பொருளாதார ரீதியாக பின்தங்கிய பெண்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு, வலுவூட்டுவதற்கு தொழில்சார் பயிற்சி, நுண் நிதியக் கடன் வாய்ப்புகள் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை முன்வைத்தல்.

- வறுமை, சுகாதாரப் பிரச்சனைகள் அல்லது பிற சமூகப் பொருளாதாரக் காரணிகளால் கடுமையான இன்னல்களை எதிர்கொள்ளும் பெண்களுக்கு சுகாதாரச் சேவைகள் மற்றும் சமூக நலப் பலன்களுக்கான அணுகலை வழங்குதல்.
- செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் தாக்கத்தை கண்காணிப்பதற்கு வலுவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பொறிமுறைகளை உருவாக்குதல்.
- பங்கேற்பு விகிதங்கள், திறன் மேம்பாட்டு முடிவுகள் மற்றும் பெண் பயனாளிகளின் சமூக-பொருளாதார குறிகாட்டிகள் உள்ளிட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் பற்றிய தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
- பாலின அடிப்படையில் இடம்பெறும் குடும்ப வன்முறை, பணியிடங்களில் இடம்பெறும் வன்முறை, பொதுப் போக்குவரத்தில் இடம்பெறும் வன்முறை மற்றும் சைபர் குற்றம் உள்ளிட்ட பல்வேறு வன்முறைச் செயல்களை எதிர்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
- அத்தகைய குற்றங்களினை திறம்பட கையாள்வதற்குத் தேவையான வழிகாட்டுதலினைச் செய்தல் மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கு விளைத்திறனாக முன்வைத்தல்.
- தொடர்புடைய சேவைகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் திறமையான பரிந்துரையை வழங்குதல்.
- அரசியலில் பெண்கள் நுழைவதை மேம்படுத்துதல்.
- பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்கொடுமைகளைக் குறைத்தல் மற்றும் வன்முறைக்கு எதிராக எழுந்து நிற்பதற்கு மக்களினை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளினை எடுத்தல்.
- பாலின சமத்துவச் சட்டம் மற்றும் பெண்களினை வலுவூட்டும் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- "குழந்தைகள் உரிமைகள் சாசனத்தின் பிரகாரம் குழந்தைகளுக்கான ஒரு சட்டத்தை உருவாக்குதல்" சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.
- பாலின அடிப்படை மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பதற்கான இரண்டாவது ஐந்தாண்டு தேசிய செயல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- தற்காலிக மகளிர் பராமரிப்பு இல்லங்களை நடாத்துவது தொடர்பிலான வழிகாட்டுதல்களை வெளியிடுதல்.
- பெண்களின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கான ஐந்தாண்டு தேசிய செயல் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு அமைச்சின்/நிறுவனத்தின் முன்னேற்றத்தைப் பின்தொடர்தல்..
- பாலின சமத்துவம் மற்றும் பெண்களினை வலுவூட்டுதல் தொடர்பில் தேசியக் கொள்கைக்கு இணங்க தேசிய செயல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- இலங்கையில் குழந்தைகளுக்கு எதிரான இணைய வன்முறைகளைத் (Cyber Violence) தடுப்பதற்கான செயல்திட்டத்தைத் தயாரித்தல்.
- மனித கடத்தலை எதிர்த்து நிர்வகிப்பதற்கான தேசிய மூலோபாய திட்டத்தில் இந்த அமைச்சுடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.
- ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தினூடாக ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகளினை பாலின அடிப்படையிலான வன்முறையைக் குறைப்பதற்காக வெற்றிகரமாகப் பயன்படுத்துதல்.
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்தில் அமுலாக்கப்படும் பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான முறையான தரவுத் திட்டமொன்றினைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.
- வீட்டு அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் விரிவாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் செயல்படுத்தல். இதன் கீழ், அமைச்சினால் குழந்தைகள் தொடர்பில் செயற்படும் பிற நிறுவனங்களுடன் கூட்டு அணுகுமுறையில் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பிலான தேசிய செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றிவரும் புதிய முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தலைமை அலுவலகத்தின் புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் தேவையான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தேவையான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடு (2024-2028) தொடர்பான ஐந்தாண்டு பல்துறை செயல் திட்டத்திற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுதல் மற்றும் முன்பிள்ளைப் பருவப் பராமரிப்பு மற்றும்

மேம்பாடு குறித்த தேசியக் குழு பொறிமுறையை மேம்படுத்துவதன் மூலம் மேற்கண்ட திட்டத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

## சமூக வலுவூட்டல் பிரிவு

- இலங்கையில் வாழும் அனைத்துப் பிரஜைகளின் உள ஆரோக்கியத்தினை மேம்படுத்துதல்.
- சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தினூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல்.
- கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சங்கங்களுக்குச் சொந்தமான நிதியினை செயல் சுழற்சியில் பயன்படுத்துதல்.
- 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவுத் திருத்தத்தினை நிறைவு செய்தல்.
- சைகை மொழிச் சட்ட வரைவினை அங்கீகரித்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரித்தல்,
- தேசிய செயற் திட்டமொன்றினைத் தயாரித்தல்.
- தற்போது திருத்தப்பட்ட நிலையிலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கு அணுகல் வசதிகளினை வழங்கும் வர்த்தமானியின் செயற்பாடுகளினை நிறைவு செய்தல்.
- அக்குரஸ்ஸ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தினை ஆரம்பித்தல்.
- காத்திருப்புப் பட்டியலிலுள்ள மூத்த பிரஜைகளுக்கு முதியோர் கொடுப்பனவினை வழங்குதல்
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக முன்னெடுக்கப்படும் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு உள் தர உறுதிப்பாட்டு அலகொன்றினை (Internal Quality Assurance Unit) அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல்.
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்வி பணியாட்தொகுதி, பல்கலைக்கழக பேராசிரியர் சபைக்குச் சமமான தகைமைகளினைக் கொண்ட பணியாட்தொகுதியொன்று என்பதுடன், அவர்களுக்கு மேலதிகக் கல்வி தொடர்பில் நிறுவனத்தினூடாக முதுகலைப் பட்டப் பாடநெறிகளினைத் தொடர்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்.
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளினை விரிவுபடுத்துவதற்கு புதிய பாடநெறிகளினை ஆரம்பிக்கும் தேவைப்பாடு உள்ளது என்பதுடன், தற்போதுள்ள பிரிவுகளினை (Divisions) கல்விப் பிரிவுகளாகப் (Departments) பெயரிட்டு நிறுவனத்தில் கட்டமைப்பு மாற்றத்தினைக் கொண்டு வருதல்.
- நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளினை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம் உயர் தரம் சித்தியடைந்த அநேகமானவர்களுக்கு உயர் கல்வியினை வழங்கும் நோக்கத்துடன் நிறுவனத்தினை பல்கலைக்கழகமொன்றாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நிறுவனத்தின் ஐந்து ஆண்டு திட்டத்தினைத் தயாரிப்பதனூடாக (2023-2027) எதிர்வரும் வருடங்களுக்கு நிறுவனத்தின் வளர்ச்சிச் செயற்பாடுகளினைத் திட்டமிடுதல்.
- ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு பிரேரணைகள் திட்டங்களுக்கு புதிய உறுப்பினர்களினை ஆட்சேர்ப்பதனை விரிவுபடுத்துதல் மற்றும் பயன்களினை விரிவுபடுத்துதல்.
- இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஆவணங்களினை டிஜிட்டல் மயமாக்குவதனூடாக சேவைகளினை விளைத்திறனாக்குதல்.
- உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி வாய்ப்புக்களினை விரிவுபடுத்துவதனூடாக சேவை விளைத்திறனினை உயர்த்துதல்.

.....................................................................................

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

பெயர்:

பதவி :

திகதி

**(மேலே காட்டப்பட்டிருப்பது சிங்கள மொழியில் வெளியான அத்தியாயம் 02 இன் தமிழ் மொழிபெயர்ப்பொன்றாகும்.)**

# அத்தியாயம் 03

## 2023 திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவு பெற்ற வருடத்திற்கான மொத்த நிதிச் செயற்றிறன்

### 3.1 நிதிச் செயற்திறன் கூற்று

ஏசீஏ - எவ்

2023 திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவு பெற்ற வருடத்திற்கான

நிதிச் செயற்திறன் கூற்று

| திருத்தப்பட்ட பாதீட்டு ஒதுக்கீடுகள் 2023 | | குறிப்பு | உண்மைநிலை 2023 | உண்மைநிலை 2022 | |
|---|---|---|---|---|---|
| ரூபா | | | ரூபா | ரூபா | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச சந்தைகள் மீதான வரி | 3 | - | - | |
| - | வரியல்லா வருமானங்களும் மற்றும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| | | | | | |
| - | **வருவாய் அல்லாத பெறுகைள்** | | - | - | |
| - | திறைசேரி கட்டுநிதி | | 1,715,719,945 | 1,814,521,001 | ஏசீஏ -3 |
| - | வைப்புக்கள் | | 48,060,337 | 27,157,529 | ஏசீஏ -4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 53,929,653 | 202,172,895 | ஏசீஏ -5 |
| | பிற பிரதான ஏட்டுக் கணக்குப் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **1,817,709,935** | **2,043,851,425** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **1,817,709,935** | **2,043,851,425** | |
| | திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ) | | 77,271,596 | 11,560,292 | |
| | **தேறிய வருமானப் பெறுகைள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் உ = (இ)-(ஈ)** | | 1,740,438,339 | 2,032,291,133 | |
| | | | | | |
| | **கழித்தல் - செலவுகள்** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - | **மீண்டுவரும் செலவுகள்** | | - | - | |
| 1,402,893,800 | சம்பளம், கூலி மற்றும் ஊழியர் பயன்கள் | 5 | 1,309,970,267 | 1,143,556,592 | |
| 1,099,471,200 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 896,644,376 | 835,124,775 | **ஏசீஏ** - 2(ii) |
| 48,296,240,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 38,345,089,100 | 12,705,436,785 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| 15,000 | பிற மீண்டுவரும் செலவுகள் | 9 | - | - | |
| 50,798,620,000 | **மொத்த மீண்டுவரும் செலவுகள் (ஊ)** | | **40,551,703,743** | **14,684,118,152** | |
| | | | | | |
| | **மூலதனச் செலவுகள்** | | | | |
| 20,500,000 | மூலதனச் சொத்துக்களினைப் புனரமைப்பதும், மேம்படுத்துவதும் | 10 | 12,614,544 | 10,020,708 | |
| 232,270,000 | மூலதனச் சொத்துக்களினைக் கொள்ளல் | 11 | 77,786,440 | 80,243,535 | |
| 1,005,600,000 | மானிய மாற்றல்கள் | 12 | 247,071,290 | 85,204,725 | **ஏசீஏ** - 2(ii) |
| - | நிதிச் சொத்துக்களினைக் கொள்ளல் | 13 | - | - | |
| 1,900,000 | திறன் விருத்தி | 14 | 701,777 | 1,272,519 | |
| 1,783,618,942 | பிற மீண்டுவரும் செலவுகள் | 15 | 1,667,520,350 | 3,784,955,608 | |
| 3,043,888,942 | **மொத்த மூலதனச் செலவுகள் (எ)** | | **2,005,694,402** | **3,961,697,095** | |
| | | | | | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 65,735,567 | 15,938,013 | **ஏசீஏ** -4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 62,833,895 | 359,021,480 | **ஏசீஏ** -5 |
| | **பிற பிரதான ஏட்டுக் கணக்குக் கொடுப்பனவு** | | - | - | |
| | **பிரதான ஏட்டுச் செலவுகள் (ஏ)** | | **128,569,462** | **374,959,493** | |
| | | | | | |
| | மொத்தச் செலவுகள் எ = (ஈ+உ+ஊ) | | 42,685,967,607 | 19,020,774,740 | |
| | | | | | |
| - | **2023 திசம்பர் 31 ஆந் திகதிய கட்டுநிதி மீதி ஏ = (இ-எ)** | | **(40,945,529,268)** | **(16,988,483,607)** | |
| | | | | | |
| | **கட்டுநிதி இணக்கக்கூற்றின் பிரகாரம் மீதி** | | (40,945,529,268) | (16,988,483,607) | **ஏசீஏ** -7 |
| | **திசம்பர் 31 ஆந் திகதிய கட்டுநிதி மீதி** | | - | - | **ஏசீஏ** -3 |
| | | | **(40,945,529,268)** | **(16,988,483,607)** | |

## 3.2 நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று

| | | | ஏசீஏ-பீ |
|---|---|---|---|
| **2023 திசம்பர் 31 ஆந் திகதிய** | | | |
| **நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று** | | | |
| | **குறிப்பு** | **உண்மை நிலை** | |
| | | **2023** | **2022** |
| | | **ரூபா.** | **ரூபா.** |
| நிதியல்லாத சொத்துக்கள் | | | _ |
| சொத்து, பொறித் தொகுதி, உபகரணங்கள் | ஏசீஏ-6 | 1,910,556,295 | 1,656,144,140 |
| நிதிச் சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ -5/5 (ஏ) | 165,752,827 | 156,848,585 |
| காசும் மற்றும் காசுக்குச் சமமானவையும் | ஏசீஏ -3 | - | - |
| மொத்தச் சொத்துக்கள் | | **2,076,309,122** | **1,812,992,725** |
| | | | |
| நிகர சொத்துக்கள்/ நிறை | | | |
| திறைசேரிக்கு நிகர சொத்துக்கள் | | 111,223,654 | 84,644,181 |
| சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரண தொகுதி | | 1,910,556,295 | 1,656,144,140 |
| வாடகை மற்றும் வேலை முன்பதிவுகளுக்கு முன்பதிவு | ஏசீஏ -5 (பீ) | | |
| | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ -4 | 54,529,173 | 72,204,404 |
| கட்டுநிதி மீதி | ஏசீஏ -3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **2,076,309,122** | **1,812,992,725** |

